सत्यमेव जयते
भारत सरकार
स्वास्थ्य एवं परिवार कल्याण मंत्रालय
निर्माण भवन, नई दिल्ली - 110011
GOVERNMENT OF INDIA
MINISTRY OF HEALTH & FAMILY WELFARE
NIRMAN BHAWAN, NEW DELHI - 110011

# இந்திய இளைஞர்கள் நிலைமை மற்றும் தேவைகள் 2006–2007



## எக்ஸிக்யூட்டிவ் ஸம்மரி
## தமிழ்நாடு

International Institute for Population Sciences

Population Council

This executive summary presents, in brief, findings on the situation of youth in Tamil Nadu, part of a sub-national study undertaken by the International Institute for Population Sciences, Mumbai and the Population Council, New Delhi, as part of a project to collect information on key transitions experienced by youth in India, including those related to education, work force participation, sexual activity, marriage, health and civic participation; the magnitude and patterns of young people's sexual and reproductive practices before, within and outside of marriage as well as related knowledge, decision-making and attitudes. The project was implemented in six states of India, namely, Andhra Pradesh, Bihar, Jharkhand, Maharashtra, Rajasthan and Tamil Nadu.

**For detailed reports please contact:**


**International Institute for Population Sciences**
Govandi Station Road, Deonar
Mumbai 400088
India
Phone: 022-42372400/42372518
email: iipsyouth@rediffmail.com
Website: http://www.iipsindia.org

**Population Council**
Zone 5-A, Ground Floor
India Habitat Centre
Lodi Road
New Delhi 110003
Phone: 011-2464 2901/02
email: info-india@popcouncil.org
Website: http://www.popcouncil.org/asia/india.html


The International Institute for Population Sciences (IIPS) is a deemed university under administrative control of Ministry of Health and Family Welfare, Government of India. The Institute engages in teaching and research in population sciences, and has been actively involved in building the capacity of Population Research Centres, and other state and central government offices that address population issues in the country and in the Asia-Pacific region. It has a proven record in conducting national- and sub-national-level studies in reproductive health, including the National Family Health Surveys and District Level Household and Facility Survey under the Reproductive and Child Health programme.

The Population Council is an international, non-profit, non-governmental organisation that seeks to improve the well-being and reproductive health of current and future generations around the world and to help achieve a humane, equitable and sustainable balance between people and resources. The Council conducts biomedical, social science and public health research, and helps build research capacities in developing countries.

Copyright © 2009 International Institute for Population Sciences, Mumbai and Population Council, New Delhi

Suggested citation: International Institute for Population Sciences (IIPS) and Population Council. 2009. *Youth in India: Situation and Needs 2006-2007, Executive Summary, Tamil Nadu.* Mumbai: IIPS.



இந்திய இளைஞர்கள் சூழ்நிலை மற்றும் தேவைகள் பற்றிய ஆய்வு (இனி இது இளைஞர் ஆய்வு என்று குறிப்பிடப்படுகிறது). இந்தியாவில் இருக்கும் திருமணமான மற்றும் திருமணமாகாத இளைஞர்களிடையே நிகழ்ந்த முக்கிய பருவ மாற்றங்களை கண்டறிவதற்காக மும்பையில் உள்ள இண்டர்நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஃபார் பாபுலேஷன் சயின்ஸஸ் மற்றும் புதுதில்லியில் உள்ள பாபுலேஷன் கௌன்சில் இணைந்து மாநில அளவில் ஆய்வுசெய்து மேற்கொண்டு செயற்படுத்திய முதல் ஆய்வறிக்கை. 2001ஆம் ஆண்டின் இந்திய மக்கள் தொகையில் இளைஞர்கள் எண்ணிக்கை 315 மில்யனாகும். இது 31 சதவிகிதமாகும். இந்த இளைய சமதாயத்தினர் நாட்டின் எதிர்கால சமூக, பொருளாதார, அரசியல் தன்மைகளை பிரதிபப்பதோடுமட்டுமல்லாமல் அதன் இலக்காகிய மக்கள்தொகைப் பெருக்கத்தை கட்டுப்படுத்துபவர்களாகவும், பிராந்திய வேற்றுமைகளை சீராக்குதல் போன்றவற்றை நிர்ணயிப்பவர்களாகவும் விளங்குவார்கள். ஆனால் இக்கால இளைஞர்கள் கடந்தகால இளைஞர்களைவிட ஆரோக்கியமாக, நகர்புறவாசிகளாக, கல்வியறிவாளர்களாக இருந்த போதிலும் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். மேலும் பருவமாற்றமடையும்போது இளைஞர்கள் பாலியல் மற்றும் இனிப்பெருக்கம் சம்பந்தப்பட்ட ஆரோக்கியத்தில் குறிப்பிடத்தக்க அபாயத்தை எதிர்கொள்கிற ார்கள். பலர் உடலுறவு மற்றும் இனப்பெருக்கம் பற்றி விளக்கம்பெறக்கூடிய அறிவாற்றலோ, நிர்ணயம்செய்யும் திறனோ இல்லாதவர்களாக உள்ளார்கள்.

இளைஞர்களிடையே மேற்கண்ட விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் முக்கியத் துவத்தை உணர்ந்து பல்வேறு தேசிய கொள்கைகளும், திட்டங்களும் 2000 ஆம் ஆண்டு முதல் உருவாக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக தேசிய மக்கள் தொகை கொள் தொகை கொள்கை 2000, தேசிய இளைஞர் கொள்கை 2003, பத்தாவது மற்றும் பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்கள், தேசிய இளைஞர் இனப்பெருக்க மற்றும் பாலியல் சுகாதார கொள்கை மற்றும் தேசிய ஊரக சுகாதார இயக்கம் இணைந்து இந்திய இளைஞர் சமூகத்தினரின் பலவகையான தேவைகளை அறிந்து அதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது. இளைய சமுதாயத்தினருடைய தற்போதைய நிலைகளையும் தேவைகளையும் பிரதிபக்கும்வகையில் போதிய ஆதாரம் இல்லாததால் கொள்கைகளையும் திறம்பட செயற்படுத்தமுடியவில்லை. தற்போதுள்ள ஆதாரங்கள் மிகக்குறந்த அளவு ஆதாரங்களே. அவை போதாதவைகளாகவும் நோக்கத்திற்குப் பொருந்தாத ஆய்வுகளாகும்.

ஊரக மற்றும் நகர்புற இளைஞர் பற்றிய ஆய்வு திருமணமான மற்றும் திருமணமாகாத இளம் ஆண் பெண்களை (15-24 வயதுவரை) மையமாகக் கொண்டு நடத்தப்பட்டது. திருமணமான இளைஞர்கள் பற்ற க்குறைவினால் பதினைந்து முதல் இருபத்தைந்து வயதுவரை உள்ள திருமணமான ஆண்கள் ஆய்வில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். இந்த ஆய்வில் சேர்க்கப்பட்டுள்ள விவரங்கள் சிறுவனிருந்து வாபனாக மாறும் காலகட்டத்தில் ஏற்பட்ட அனுபவம் அதாவது, கல்வி, வேலையில் பங்கேற்பு, பாலியல் செயல்கள், திருமணம், உடல்நலம் மற்றும் திருமணத்திற்கு முன்னரும் பின்னரும், திருமண வாழ்க்கையினுள்ளும் வெளியிலும் உடலுற வு மற்றும் இனப்பெருக்க செயற்பழக்கங்கள், அது தொடர்பான அறிவு, முடிவெடுத்தல் மற்றும் நோக்கம் அகியவையும் அடங்கும்.

இளைஞர் ஆய்வு, கணக்கெடுப்பு, தரமான புள்ளிவிவர சேகரிப்பு, கணக்கெடுப்பிற்கு முன்னரும் பின்னரும் என்ற மூன்று கட்டங்களைக் கொண்டது. இந்த ஆய்வு பலகட்டங்களாக ஆந்திரா, பீகார், ஜார்கண்ட், மகாராஷ்ட்டிரம், ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு அகிய ஆறு மாநிலங்களில் நடத்தப்பட்டது.

இந்த அறிக்கை தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட ஆய்வு கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்துகிறது. இந்த ஆய்வு 2006 மே மாதத்திருந்து 2007 ஜனவரி மாதம் வரை நடத்தப்பட்டது. ஆய்வின்போது 9752 இளைஞர்களை சந்திக்க

முடிந்தது. அதில் 7996 திருமணம் ஆன மற்றும் திருமணம் ஆகாத இளம் பெண்கள் மற்றும் ஆண்களிடம் வெற்றிகரமாக நேர்காணல் நடத்தப்பட்டது.

## குடும்பங்களின் குணாதிசயங்கள்

37893 குடும்பங்கள் நேர்காணலுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டன. அதில் 35880 மாதிரி குடும்பங்களில் நேர்காணல் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அந்த குடும்பங்களில் வழக்கமாக வசிக்கும் 1,46,973 நபர்களிடம் கணக்கு எடுக்கப்பட்டது. குழந்தைகளும் (0–9 வருடம்) பெரியவர்களும் (60 வயதிற்கு மேற்பட்ட) மிகக் குறைந்த எண்ணிக்கையில் காணப்படுவதும், மிகக் குறைந்த அளவில் கருவளம் இருப்பதும் அந்த மக்கள் தொகையின் வயது பகிர்வின் முக்கிய தன்மையாகும். கணக்கு எடுப்பின்போது இளைஞர்கள் எண்ணிக்கை அதாவது 10–14 வயதினர், 15–19 வயதினர் மற்றும் 20–24 வயதினர் மொத்த மக்கள் தொகையில் ஒவ்வொரு பிரிவினரும் சராசரியாக 9 விழுக்காடு உள்ளனர். 15–24 வயது வரை உள்ளவர்கள் மொத்த மக்கள் தொகையில் 18 விழுக்காடு உள்ளனர். தமிழ்நாட்டில் கணக்கெடுக்கப்பட்ட மக்கள் தொகையில் பான விகிதம் 1000 ஆண்களுக்கு 999 பெண்கள் காணப்பட்டார்கள்.

ஆறு வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினரில் ஏறத்தாழ நான்கில் ஒரு பகுதியினருக்கு முறைப்படியான கல்வி இல்லை. இவர்களில் ஆண்களை விட (15%) அதிக அளவு பெண்களே (32%) அடங்குவார்கள். இதற்கு மாறாக, 18% ஆண்களும் 13% பெண்களும் 12-ம் வகுப்பு அல்லது அதற்கு மேலும் படித்தவர்கள். ஆண்கள் 8 ஆண்டுகளும் பெண்கள் 5 ஆண்டுகளும் சராசரியாக பள்ளி கல்வி முடித்தவர்களாக உள்ளனர். அதுவே கிராமப்புறத்துடன் நகர்புறத்தை ஒப்பிடும் போது மூன்று வருட கல்வி அதிகமுடையவர்களாக காணப்பட்டார்கள் (கிராமப்புறத்தில் 5 ஆண்டுகள் பள்ளிகல்வி படித்தவர்கள் என்றால் நகர்புறத்தில் 8 ஆண்டுகள் பள்ளிக் கல்வி படித்துள்ளார்கள்).

நேர்காணல் கண்டவர்களில் 16% குடும்பங்கள் குடிசைகளில் வசிக்கிறார்கள் (மண்ணாலும் ஓடுகளாலும் மேலும் விலை குறைந்த பொருட்களாலும் கட்டப்பட்டது). 44% குடும்பங்கள் ஓரளவு நடுத்தர வீடுகளில் (விலை குறைவான மற்றும் உயர்தர பொருட்களால் கட்டப்பட்ட) வசிக்கிறார்கள் 5ல் 2 பங்கு குடும்பங்கள் ஸ்திரமான வீடுகளில் வசிக்கிறார்கள் (உயர்தர பொருள்களால் கட்டப்பட்ட வீடுகளில்). 90 விழுக்காடுக்கு மேற்பட்ட குடும்பத்தினர் வீடுகளில் மின்சார வசதி காணப்பட்டது. அனேகமாக அனைத்து (95%) நகர்புற குடும்பங்களிலும் 88% கிராமப்புற குடும்பங்களிலும் மின்சார வசதி உள்ளது. ஏறத்தாழ எல்லா குடும்பங்களிலும் (96%) குடிதண்ணீர்வசதி குழாய் மூலமாகவோ அல்லதுகை பம்பு அல்லது மூடிய கிணறு மூலமாகவோ உள்ளதாக கூறினார்கள். நகரத்தில் 69 விழுக்காடும் கிராமத்தில் 20 விழுக்காடுமாக, ஏறத்தாழ ஐந்தில் இரண்டு பங்குக்கு மேலான குடும்பங்களில் (42%) ஏதாவது ஒருவகை கழிவறைவசதி இருப்பதாக தெரிவித்தார்கள்.

மூன்றில் ஒரு பகுதி நகர்ப்புறத்தினர் பெரிய செல்வந்தர்களாகக் காணப் பட்டார்கள். அதற்கு மாறாக வெறும் ஒன்பது சதவிகித கிராமப்புற குடும்பங்கள் மட்டுமே பெரிய செல்வந்தர்களாக இருக்கிறார்கள். அதேபோன்று 9% நகர்புற குடும்பங்களும் 29% கிராமப்புற குடும்பங்களும் குறைந்த வசதியுடன் அதாவது மிகவும் எழ்மையில் வாழ்ந்து வருகிறார்கள்.

## இளைஞர்களின் நிலை

மேலே குறிப்பிட்டவாறு, மொத்தம் 7996 இளைஞர்களிடம் நேர்காணல் நடத்தப் பட்டது. வயது கணக்கீடுகளின்படி திருமணம் ஆனவர்களைவிட திருமணம் ஆகாதவர்கள் சற்று வயது குறைவானவர்களாக இருந்ததாகத் தெரியவந்தது. மற்றும் கிராமப்புற இளைஞர்கள் நகர்புற இளைஞர்களைவிட சற்று வயது குறைந்தவர்களாகக்



காணப்பட்டார்கள். பத்தில் ஒன்பதுபேர் இந்து சமுதாயத்தினரும், 5 சதவிகிதம் முஸ்ம் சமுதாயத்தினரும் ஆவர். சாதிகள் பகிர்வுகளின்படி 71 முதல் 74 விழுக்காட்டினர் பிற பின்தங்கிய சமுதாயத்தினர், 23 முதல் 27 விழுக்காட்டினர் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர், மீதமுள்ள மூன்று விழுக்காட்டினர் பொது சாதியினர் அல்லது பழங்குடியினர் என்றும் இந்த ஆய்வு தெரிவிக்கிறது. ஏறத்தாழ ஐந்தில் நான்கு இளைஞர்கள் தங்களுடைய தாய் தந்தை இருவரும் உயிருடன் இருப்பதாகத் தெரிவித்தார்கள். பெற்றோரில் ஒருவர்மட்டும் வசிக்கும் குடும்பத்தில் தந்தையைவிட (2—3) தாய் உயிருடன் இருப்பது (11—13) தெரியவருகிறது. இறுதியாக ஒரு சதவிகிதத்தினர் தாய் மற்றும் தந்தை இருவரும் உயிருடனில்லை என்று தெரிவித்தார்கள்.

## கல்வி

மாநிலத்தில் பெரும்பாலான இளைஞர்கள் (91—94%) குறைந்தது ஐந்து வருட பள்ளிப்படிப்பை எட்டியவர்கள். திருமணம் மற்றும் பானபாகுபாடு இல்லாமல் 8ருந்து 10 வருட கல்வித் தகுதியுடைய இளைஞர்களாக காணப்பட்டார்கள் என்று கல்வித்தகுதி அளவீடுகள் தெரிவிக்கின்றன. நேர்காணல் சமயத்தில் 5ல் 2 பங்கு திருமணம் ஆகாத இளைஞர்கள் (ஒருசிலர் திருமணமானவர்கள்). பள்ளி அல்லது கல்லூரிக்கு செல்கிறார்கள். முதல் வகுப்பை முடித்த 95 முதல் 96 விழுக்காடு இளைஞர்கள் ஐந்தாம் வகுப்பு வரையிலும், எண்பது விழுக்காடு இளைஞர்கள் எட்டாம் வகுப்பு வரையிலும் பள்ளிப்படிப்பை முடித்துள்ளார்கள். எட்டாம் வகுப்பிற்கு மேல் கல்வி கற்றோர்களின் எண்ணிக்கை இளம் ஆண்கள் பெண்கள் இருபாலரிடமும் படிப்படியாகக் குறைந்துள்ளது. இளம் பெண்கள் மற்றும் இளம் ஆண்கள் எட்டாம் வகுப்பிருந்து பதினொன்றாம் வகுப்பு வரை பள்ளி செல்லும் எண்ணிக்கை ஒரு வருடத்திற்கு 10 சதவிகிதம் அல்லது அதற்குமேலும் குறைந்துகொண்டே வந்துள்ளது. திருமணமானவர்கள் மற்றும் கிராமப்புற இளைஞர்கள் உயர் கல்விப்படிப்பை முடிப்பதில் மற்றவர்களைவிட குறைவாகக் காணப்பட்டார்கள்.

**Cumulative percentage of youth who had completed each year of education (Classes 1 to 17), Tamil Nadu (combined), 2006**




MM=Married men; MW=Married women; UM=Unmarried men; UW=Unmarried women

**Cumulative percentage of youth who had completed each year of education (Classes 1 to 17), Tamil Nadu (urban), 2006**




MM=Married men; MW=Married women; UM=Unmarried men; UW=Unmarried women

இளைஞர்கள் தங்கள் பெற்றோர்களைவிட அதிகக் கல்வித்தகுதி பெற்றிருந்தார்கள். ஆண் மற்றும் பெண் இளைஞர்களின்

தந்தை சராசரியாக 5 வருட கல்வி கற்றிருந்தார்கள். ஆனால் இவர்களின் தாய் மிக குறைந்த அளவாக, சராசரியாக இரண்டிருந்து மூன்று ஆண்டுகள்வரை கல்வி பயின்றிருந்தார்கள்.

**Cumulative percentage of youth who had completed each year of education (Classes 1 to 17), Tamil Nadu (rural), 2006**




MM=Married men; MW=Married women; UM=Unmarried men; UW=Unmarried women

குழந்தைகள் தங்களுடைய பண்ணை (விவசாய நிலத்தில்) அல்லது குடும்பத்தொழில் செய்வதற்காகவும், ஊதியம் ஈட்டுவதற்காகவும் வெளி வேலை செய்யத் தேவைப்படுவதாலும் அல்லது பள்ளிச் செலவை சமாளிக்கமுடியாத காரணங்கள் போன்ற பொருளாதாரப் பற்றாக்குறையினாலும் இளம் ஆண்களும் பெண்களும் இடைநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிப்படிப்பை தொடராமல் விட்டுவிடுவதற்கான முக்கிய காரணங்களாகக் கூறினார்கள். மேலும் இளைஞர்களிடையே கல்வியில் ஆர்வமின்மையும், பள்ளித் தேர்வில் தோல்வியடைவதும், பள்ளிகள் தொலை தூரத்தில் உள்ளதும் வசதியற்ற பள்ளிச் சூழ்நிலை ஆகியவையும் முக்கிய காரணங்களாகக் கூறப்பட்டன. குறிப்பாக பள்ளிதழுவிய காரணங்களுள் மிகக்குறைவாக மதிப்பெண் பெருவதும் பள்ளிப்படிப்பை விட்டுவிடுவதன் உந்துதலுக்குப் பின்னால் அமைந்திருக்கும் முக்கிய காரணமாகுமென்று பத்தாம் வகுப்பு முடிவதற்கு முன்னரே பள்ளிப்படிப்பை விட்டுவிட்ட 47 சதவிகித இளம் ஆண்களாலும் 51 சதவிகித இளம் பெண்களாலும் கூறப்பட்டது. பள்ளிப்படிப்பைத் தொடரமுடியாததற்கு பருவமாற்றம் காரணமென்று மிகவும் சொற்பமானவர்கள் கூறியது இங்கு குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். இருந்தபோதிலும் பத்தில் ஒருபங்கு திருமணமான இளம்பெண்கள் திருமணமாவதால் தங்களுடைய உயர்நிலைக் கல்விப்படிப்பை தொடரமுடியவில்லை என்று கூறினார்கள்.

**Percentage of youth who had discontinued schooling by class when discontinued and reasons for discontinuation, Tamil Nadu, 2006**




தேவையான அடிப்படை வசதி பற்றி பள்ளியில் தொடர்ந்து படித்துக்கொண்டிருக்கும் மற்றும் படிப்பை விட்டுவிட்ட இளைஞர்களிடையே பெருமளவிற்கு கருத்து வேறுபாடுகள் காணப்படுவதாக ஆய்வு முடிவுகள்

தெரிவிக்கின்றன. பள்ளிப்படிப்பைத் தொடரும் மற்றும் தொடராமல் விட்டுவிட்ட அனேக இளைஞர்களுக்கு குடிநீர் மற்றும் விளையாட்டு மைதான வசதி கிட்டியுள்ளது. இருந்தாலும், கழிப்பறை வசதி நூலகம் அகியவை இருப்பதை பள்ளிப்படிப்பை விட்டுவிட்டவர்களைவிட தொடர்கிறவர்கள் அதிகமாக முன்வைத்தனர். நேர்காணல் சமயத்தில் பள்ளிப்படிப்பை நிறுத்தி விட்டவர்களை விட, பள்ளியில் தொடர்பவர்கள் மேற்கண்ட நான்கு அடிப்படை வசதிகள் கிடைக்கப் பெற்றுள்ளதை அனேகமாக குறிப்பிட்டிருப்பதை இந்த ஆய்வு கண்டுள்ளது. பள்ளிப்படிப்பைத் தொடராததற்கும் மேற்கண்ட அடிப்படை வசதிகள் குறைவாக உள்ளதையும் காரணமாகக் கொள்ளலாம். பள்ளிப்படிப்பைத் தொடர்பவர்களை விட படிப்பைத் தொடராத ஒருசிலரே தனியாரிடம் ட்யூஷன் படித்தார்கள் என்பதை இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது. அதுபோன்று பள்ளிப்படிப்பைத் தொடராத இளைஞர்களில் குறைவானவர்கள் மட்டுமே பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருப்பார்கள். இந்த ஆய்வில் கண்டது, பள்ளிகளின் மோசமான செயல்பாடு படிப்பைத் தொடராததற்கு முக்கிய காரணமாக இருக்கலாம்.

## வேலை

ஏறத்தாழ மூன்றில் இரண்டுபங்கு இளம் ஆண்களும் பாதியளவு இளம்பெண்களும் ஊதியம்பெறும் மற்றும் ஊதியம் பெறாத வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள். சொல்லப்போனால் ஏறத்தாழ எல்லா திருமணமான இளம் ஆண்களும் ஐந்தில் மூன்று பகுதிக்கும் அதிகமான திருமணமாகாத இளம் ஆண்களும் மேற்படி வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள். பாதிக்கும் மேற்பட்ட திருமணமான பெண்களும், 5ல் 2 பங்கு திருமணமாகாத இளம் பெண்களும் மேற்படி வேலையில் ஈடுபட்டுள்ளார்கள்.நகர்புற இளைஞர்களைவிட அதிகமான கிராமப்புற இளைஞர்கள் வேலயில் ஈடுபட்டுள்ளார்கள். பொருளாதாரப் பிரச்சினைகாரணமாக 21 சதவிகித இளம் ஆண்களும் 17 சதவிகித இளம் பெண்களும் சிறுவயதிலோ 15 வயதிற்கு முன்போ

**Percentage of youth who engaged in paid or unpaid work in last 12 months, Tamil Nadu, 2006**




**Percentage of youth who ever attended a vocational training programme and percentage who were interested in participating in such programmes, Tamil Nadu, 2006**




M=Men; W=Women; MM=Married men; MW=Married women; UM=Unmarried men; UW=Unmarried women

வேலைக்குப்போகவேண்டிய கட்டாயம் உள்ளதாகக் கூறினார்கள். பெரும்பாலான இளம் ஆண்களும் (அனைத்து திருமணமானவர்களும் 59 சதவிகிதம் திருமணமாகாத வர்களும்) மற்றும் குறிப்பிடத்தக்க அளவு இளம்பெண்களும் (29 சதவிகிதம் திருமணமானவர்களும் 37 சதவிகிதம் திருமணம் ஆகாதவர்களும்) கணக்கெடுப்பதற்கு 12 மாதங்களுக்கு முன்னரே ஏதாவதொரு காலகட்டத்தில் ஊதியம் உள்ள அல்லது ஊதியமில்லாத வேலைகளில் ஈடுபட்டார்கள் என்று தெரியவந்தது. பெருமளவு, அதாவது பத்தில் ஒன்பது இளம் ஆண்களும் மூன்றில் இரண்டு இளம் பெண்களும் நேர்காணலுக்கு முந்தைய ஆண்டில் பெரும்பகுதி (குறைந்தபட்சம் 6 மாதகாலமாவது) பணி புரிந்திருக்கிறார்கள்.

வேலையின்மையின் அளவு 7% இளம் ஆண்களிடமும் 15% இளம் பெண்க ளிடமும் காணப்பட்டது. படித்தவர்கள் மற்றும் பொருளாதாரத்தில் நல்ல நிலையில் உள்ளவர்களிடம் ஏனையோரைவிட வேலையின்மை பெரிதளவிற்குக் காணப்பட்டது. இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற தங்கள் திறமையை வளர்த்துக்கொள்வதில் பெரிதும் ஆர்வமுடையவர்களாகக் காணப்பட்டார்கள். 43% இளம் ஆண்களும் 53% இளம் பெண்களும் சிற ப்பான தொழில்பயிற்சி பெறுவதில் ஆர்வமுடையதாகத் தெரிவித்தார்கள். ஆனாலும் மிகக்குறைந்த அளவில் அதாவது நான்கில் ஒருபகுதி இளம் ஆண்களும் மூன்றில் ஒருபகுதி இளம் பெண்களும் ஏதாவதொரு தொழிற்பயிற்சித் திட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

## தகவல் தொடர்பு நிலை

பெரும்பாலான இளைஞர்கள் தகவல் தொடர்புள்ளவர்களாக உள்ளார்கள். செய்தித்தாள், வார, மாத சஞ்சிகைகள், புத்தகங்கள் வாயிலாக (ஐந்தாம் வகுப்பிற்குமேல் படித்த 96% இளம் ஆண்கள் 78% இளம் பெண்கள்) மற்றும் தொலைக் காட்சி வாயிலாக (96% இளம் ஆண்கள் 92% இளம் பெண்கள்) தகவல் தெரிந்து கொண்டுள்ளார்கள். இணையதளம் வாயிலாக தகவல் தெரிந்து கொண்டவர்கள் மிகக் குறைவானவர்கள் ஆவார்கள். 5 வருடம் அல்லது அதற்குமேல் கல்வி பயின்றவர்களில் 26% இளம் ஆண்களும் 14% இளம் பெண்களும் இணையதளம் முலமாக தகவல் அறிந்ததாகக் கூறினார்கள்.

ஐந்தில் இரண்டு பகுதி இளம் ஆண்களும் அரிதாக ஓரிரு இளம் பெண்களும் பாலுணர்வைத் தூண்டக்கூடிய பத்திரிகைகள், ஆபாசப்படங்கள் ஆகியவற்றுடன் தொடர்பும் இவர்களில் ஐந்தில் நான்கு பகுதி இளம் ஆண்கள் இவற்றை எப்போதாவது அல்லது அடிக்கடி பார்க்க வாய்ப்பு இருந்ததாகக் குறிப்பிட்டார்கள். நான்கில் ஒருபகுதி இளம் ஆண்கள் ஆபாசப்புத்தகங்களைப் படிக்கவும் பார்க்கவும் செய்தார்கள். ஆண்களுடன் பெண்களை ஒப்பிட்டுப்பார்க்கையில் இணையதளத் தொடர்புடையவர்களில் 29% ஆண்கள் பெண்களில் மிகச்சிலரே இணையதளத்தில் இவற்றைப் பார்த்ததாகக் கூறினார்கள். பல்வேறு ஊடகங்கள் இளைஞர்களின் நடவடிக்கைகளுக்கு தூண்டுதலாக உள்ளதாக 50% மற்றும் அதற்கு மேற்பட்ட இளம் ஆண்கள் மற்றும் பெண்கள் தெரிவித்தனர்.

## பருவவளர்ச்சியும் பெற்றோர்தொடர்பும்

இளைஞர்கள் அடைந்துள்ள பருவ வளர்ச்சி அனுபவங்களை பொருத்தமட்டில் ஒரு கலப்புத் தோற்றத்தை ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. பெரும்பாலான குடும்பங்களில் தங்களுடைய ஆண் பெண் குழந்தைகள் சுதந்திரமாகச் செயலாற்றுவதிலும் மற்றும் வீட்டுவேலைகளைப்பற்றிய எதிர்பார்ப்பிலும் எந்த ஒரு வித்தியாசமும் காட்டுவதில்லை என்று இளம் ஆண்களும் பெண்களும் தெரிவித்தனர். அதேசமயம் பெற்றோர்களின் வளர்ப்பில் பான வேறுபாடு காரணமாக ஆண் பெண் என்ற பேதம் இருந்துவந்ததாகத் தெரிகிறது. ஆணும் பெண்ணும் சேர்ந்து செய்ய நினைக்கும் சமூகப்பணிகளில் பெற்றோர்கள் தங்கள் பெண்கள் கலந்துகொள்ள

அனுமதிப்பதில்லை என இளம் பெண்கள் ஆண்களைவிட அதிக அளவில் கருத்துத் தெரிவித்தனர். . குறிப்பாக 62 முதல் 68 சதவிகித இளம் பெண்களின் பெற்றோரும் 43 முதல் 48 சதவிகித இளம் ஆண்களின் பெற்றே ாரும் தங்கள் மகனோ அல்லது மகளோ எதிர்மறையான பானத்தாரோடு வீட்டுக்கு வெளியே பழகினால் ஆத்திரமடைகிறார்கள் என்று ஆய்வு கூறுகிறது.

பள்ளிக்குச் செல்லுதல், நண்பர்களுடன் பழகுதல், சகமாணவர்களால் இன்னலுக்குட்படுதல், உடல் ரீதியான முதிர்வு, காதல் உறவுகள் கருத்தடை முறைகள் மற்றும் இனப்பெருக்கத் தொடர்புகள் போன்றவைகளில் எல்லா இளைஞர்களிடமும் பெற்றோர்களுடன் கலந்துறையாடுவது பொதுவானதாக இல்லை. 61 முதல் 83 சதவிகித இளைஞர்கள் பள்ளிச் செயல்பாடுகள்பற்றியும் நண்பர்கள்பற்றியும் தாய் அல்லது தந்தையுடன் கலந்து பேசிக்கொள்வதாகக் கூறினார்கள். மேலும் சங்கடப்படக்கூடிய விஷயங்களான காதல் உறவுகள், இனப்பெருக்க செயல்பாடுகள், கரு தறித்தல் ஆகியவை பற்றி எப்போதாவது தாய் அல்லது தந்தையுடன் விவாதித்தாக (9 அல்லது அதற்கும் கீழான) இளைஞர்கள் தெரிவித்தார்கள். இளம்பெண்கள் மாதவிடாய் பற்றிய பிரச்சினைகள் மற்றும் ஒரு இளைஞன் தன்னை துன்புறுத்திய அனுபவங்களை தங்கள் தாயுடன் நம்பிக்கையுடன் விவாதிப்பதாகத் தெரிவித்தார்கள்.

**Percentage of youth reporting gendered socialisation experiences relative to an opposite-sex sibling/cousin, Tamil Nadu, 2006**




M=Men; W=Women; MM=Married men; MW=Married women; UM=Unmarried men; UW=Unmarried women

*Note: For married respondents, questions referred to the period prior to marriage.*

இளைஞர்களின் குடும்ப வாழ்க்கை, அனுபவரீதியிலும், நேரிடையாகவும் இன்னல்களுக்குள்ளானதாகக் குறிக்கப்படுகிறது. ஐந்தில் இரண்டுபகுதி ஆண்களும், மூன்றில் ஒருபகுதி இளம் பெண்களும் தங்களுடைய தாயை தந்தை அடித்துத் துன்புறுத்துவதை கவனித்திருக்கிறார்கள். பெரும்பாலான இளைஞர்கள் அதாவது ஐந்தில் மூன்றுபங்கு ஆண்களும், மூன்றில் ஒருபங்கு இளம் பெண்களும் தங்களது இளைமைப்பருவத்தில் பெற்றோர்களிடம் அடி, உதை வாங்கியதாகத் தெரிவித்தார்கள்.

## நண்பர்குழாமும் மற்றும் சுற்றுவட்டாரத் தொர்புகளும்

இளைஞர்கள் தாங்கள் வளர்ச்சியடையும்போது அதிகமான நண்பர்களுடன் வளர்கிறார்கள். ஏறத்தாழ எல்லா இளைஞர்களுக்கும் அதே பான நண்பர்கள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். இளம் ஆண்கள் இளம் பெண்களைவிட தனக்கு அதிக அளவு நண்பர்கள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். இருந்தோபோதிலும் எதிர் பான நண்பர்கள்

என்பது குறைவு. இருந்தபோதிலும் 29 சதவிகித இளம் ஆண்களும் 27 சதவிகித இளம் பெண்களும் மட்டுமே எதிர் பான நண்பர்கள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். நண்பர்களுககடையே ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது, படிப்பது, விளையாடுவது போன்ற செயல்களில் ஈடுபடுவதாகத் தெரிவித்தார்கள். இருந்தபோதிலும் பெருமளவு இளம் ஆண்கள் வெளிப்புற செயல்களாகிய சுற்றுலா செல்வது சினிமா பார்ப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவதாகத் தெரிவித்தனர். நண்பர்கள் வட்டாரத்தில் ஒருவருக்கொருவர் உறுதுணையாய் இருப்பதாகத் தெரிவித்தார்கள். குறிப்பாக இளம் ஆண்களும் இளம் பெண்களும் தங்களது ஆண் பெண் நட்பு பற்றி நட்பைப்பற்றி தங்களது நண்பர்களிடம் பேசுகிறார்கள். குறிப்பாக இளைஞர்கள் தங்கள் நண்பர்களிடம் விந்து வெளியாவதைப் பற்றி உறையாடுவதாகக் கூறினார்கள்.

**Percentage of youth who independently made decisions on choice of friends, spending money and buying clothes for themselves, Tamil Nadu, 2006**




**Percentage of youth allowed to visit selected places unescorted, Tamil Nadu, 2006**




W=Women; MW=Married women; UM=Unmarried women; UW=Unmarried men

*Note: Questions regarding freedom of movement were not asked of married men, as their mobility is generally unrestricted.*

## நிர்ணயிக்கும் திறன் மற்றும் பாலினச்செயல்பாடுகள்

பெருவாரியான இளம் ஆண்களும் அதிக அளவு இளம் பெண்களும் தங்கள் அன்றாட வாழ்க்கையில் நிர்ணயிக்கும் திறன் மற்றும் செயல்பாடுகளில் முடிவெடுப்ப தில்லை என்பதும் குறிப்பாக முடிவெடுப்பது சிலவற்றில்தான் என்பதும் இந்த ஆய்வில் வெளிப்படுகிறது. 52 சதவிகித இளம் ஆண்களும் 22 சதவிகித இளம் பெண்களும் தங்களது நண்பர்களைத் தேர்ந்தெடுப்பது, பணம் செலவழிப்பது, உடைகள் வாங்குவது ஆகியவற்றில் தன்னிச்சையாக முடிவெடுக்கின்றனர். அதே போல இளம் பெண்களைவிட இளம் ஆண்கள் அதிக அளவில் தங்களது கிராமம் அல்லது நகரங்களுக்குள்ளே சுதந்திரமாகச் சென்று வருகின்றனர். ஆனால் இந்த சுதந்திரம் பொதுவானதாக இல்லை. 79 சதவிகித இளம் பெண்களும் 93 சதவிகித திருமணமாகாத இளம் ஆண்களும் அவர்களுடைய கிராமம் அல்லது நகரத்திற்குள் தனியாகச் சென்றுவர முடியும். 30 சதவிகித இளம் பெண்களும் 71 சதவிகித திருமணமாகாத இளம் ஆண்களும் தங்களது கிராமம் அல்லது நகரத்தைவிட்டுத் தனியே வெளியே சென்றுவர முடியும். இளைஞர்களிடையே, குறிப்பாக இளம் பெண்களிடையே நிதி ஆதாரங்களை செலவிடுவதில் கட்டுப்பாடு குறைவாக உள்ளதாக ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. 31 சதவிகித இளம் பெண்களும் 19 சதவிகித இளம் ஆண்களும் சேமிக்கும் பழக்கம் கொண்டுள்ள போதிலும் மிகக் குறைவான 9 சதவிகித இளம் பெண்களும் 13 சதவிகித இளம் ஆண்களும் வங்கிகளிலோ, தபால் அலுவலகங்களிலோ சேமிப்புக் கணக்கு வைத்துள்ளனர். கணக்கு வைத்துள்ளவர்களில் 75 சதவிகித இளம் பெண்களும் 89 சதவிகித இளம் ஆண்களும் தாங்களே வங்கிக்கணக்கை இயக்குகின்ற னர்.

இருபாலாரது செயல்பாடுகள் கலவையானது. இளம் பெண்களைவிட இளம் ஆண்கள் பாலினம்பற்றி சமமற்ற மனநிலை உள்ளதாக கூறினார்கள். கணிசமான இளைஞர்கள் கல்வியில் ஆண்களைப்போல் பெண்கள் சிறப்பாக உள்ளார்களா? பணத்தை செலவு செய்வதில் குடும்பத்தில் கணவன் முக்கிய முடிவெடுப்பவரா? மற்றும் பெண்கள் தங்கள் திருமணத்தைப்பற்றி முடிவெடுக்கலாமா? என்பனவற்றில் சமத்து மனோநிலை இருப்பதாகக் கூறியதை ஆய்வு வெளிப்படுத்துகிறது இதற்கு மாறாக பெரும்பான்மையான இளைஞர்கள் சமத்துவமற்ற கொள்கைகளை பிற விஷயங்களில் வெளிப்படுத்தினர். உதாரணமாக 26 சதவிகித இளம் ஆண்களும் 42 சதவிகித இளம் பெண்களும் எல்லாவற்றிற்கும் ஒருபெண் தன்னுடைய கணவனுடைய அனுமதி பெற வேண்டும் என்ற கருத்தில் ஒத்துப்போகவில்லை. மேலும் 51 சதவிகித இளம் ஆண்களும் 56 சதவிகித இளம் பெண்களும் மனைவியை கணவன் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் அடிப்பதை நியாயப்படுத்தினர்.

**Percentage of youth who reported having any savings, owning an account in a bank or post office and operating the account themselves, Tamil Nadu, 2006**




M=Men; W=Women; MM=Married men; MW=Married women; UM=Unmarried men; UW=Unmarried women

**Percentage of youth who believed wife beating is justified in selected situations, Tamil Nadu, 2006**




M=Men; W=Women; MM=Married men; MW=Married women; UM=Unmarried men; UW=Unmarried women

## பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு

பாலியல் மற்றும் இனப்பெருக்கம் தொடர்பான விழிப்புணர்வு இளைஞர்களிடம் குறைந்த அளவே உள்ளது. (குறிப்பாக கருத்தரிப்பதிருந்து கருத்தடை சாதனங்கள் உபயோகித்தல், எச்.ஐ.வி மற்றும் பாதுகாப்புத் தொடர்புகள் பற்றி). உதாரணமாக பாதி அல்லது அதற்குக் குறைவான இளைஞர்களே ஒரு பெண் முதல் உடலுறவில்

கர்ப்பம் தரித்து விடுவாள் என்ற விழிப்புணர்வு கொண்டுள்ளனர். ஏறக்குறைய பாதி இளைஞர்கள் எச்.ஐ.வி. பற்றியும் அது பரவும்விதம் பற்றியும் முழுமையாக அறிந்துள்ளனர். 31 சதவிகித இளம் ஆண்களும் 12 சதவிகித இளம் பெண்களும் எச்.ஐ.வி நோய் தவிர பால்வினை நோய்கள் பற்றி அறிந்துள்ளனர். பொதுவில் அறிந்திருக்கும் விஷயங்களில்கூட ஆழ்ந்து அறிந்துள்ளது மிகக்குறைவு. கருத்தடை முறைகள் பற்றிய ஆழ்ந்த விழிப்புணர்வு இளைஞர்களிடையே போதுமானதாக இல்லை. 77 சதவிகித இளம் ஆண்கள், 39 சதவிகித இளம் பெண்கள் ஆணுறை பற்றியும் 20 சதவிகித இளம் ஆண்கள் 24 சதவிகித இளம் பெண்கள் வாய்வழி உட்கொள்ளும் கருத்தடை மாத்திரை பற்றியும் நன்கு தெரிந்து வைத்துள்ளனர். மேலும், பாலியல் மற்றும் இனப்பெருக்கம் தொடர்பான விஷயங்களை திருமணமாகாதவர்கள் மிகக்குறைந்த அளவே அறிந்திருந்தார்கள். திருமணமானவர்களில் கூட, இளம் ஆண்களைவிட இளம் பெண்கள் திருமணத்திற்கு முன் கருத்தடை முறைகள் பற்றிய விழிப்புணர்வு குறைவாக இருந்ததாகத் தெரிவித்தார்கள். அனைத்தையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது, பெரும்பாலான இளம் பெண்களும், ஒரு சில இளம் ஆண்களும் மேற்கூறிய தகவல் ஏதும் அறியாமலேயே திருமண வாழ்க்கையில் நுழைகின்றனர்

**Percentage of youth by awareness of HIV/AIDS, comprehensive knowledge about HIV/AIDS and awareness of STIs, Tamil Nadu, 2006**




M=Men; W=Women; MM=Married men; MW=Married women; UM=Unmarried men; UW=Unmarried women

*Note: *Other than HIV.*

22 சதவிகித இளம் பெண்களும், 6 சதவிகித இளம் ஆண்களும் (திருமணமானவர்களில் தங்களின் திருமணத்திற்கு முன்) பாலியல் மற்றும் இனப்பெருக்கம் தொடர்பான விஷயங்களை கேள்விப்பட்டதில்லை என தெரிவித்தனர். கேள்விப்பட்டவர்களில், கருத்தடைமுறைகள் பற்றியும், இனப்பெருக்கம் பற்றியும் நண்பர்கள் மற்றும் தகவல் சாதனங்கள் வாயிலாகப் பெறப்பட்டதாகத் தெரிவித்தனர். இதற்கு மாறாக, ஒருசில இளைஞர்கள் மட்டுமே குடும்ப உறுப்பினர்கள் மூலமாக இந்தத் தகவல்களைப் பெற்றதாகத் தெரிவித்தனர். திருமணமான இளம் பெண்கள் இவர்களிருந்து மாறுபட்டுள்ளனர். தங்கள் கணவர்மூலம் கருத்தடை சாதனங்கள் பற்றிய தகவல்களை பெற்றதாக அனேக இளம் பெண்கள் தெரிவித்தனர். ஆசிரியர்களும் மேற்கண்ட தகவல்களை எப்போதாவது அளித்ததாகத் தெரிவித்தனர். கருத்தடை சாதனம் பற்றிய தகவல்களை அறிய சுகாதாரநலப் பணியாளர்களும் ஓரளவு துணை புரிந்துள்ளனர். இதன்மூலம் இளைய சமுதாயத்தினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த குழந்தைகள் மறு ஆக்கத்திட்டம் போதிய கவனம் செலுத்தவில்லை என்று ஆய்வறிக்கை தெரிவிக்கிற து. இளம் ஆண்களோ அல்லது திருமணமானவர்களோ, சுகாதாரப்பணியாளர்களின் கவனிப்பில் வந்ததாகத் தெரியவில்லை. திருமணமான இளம் பெண்களில் மூன்றில் ஒருவருக்கு குறைவாகவே சுகாதார நலத்திட்டப் பணியாளர்கள்மூலமாகத் தகவல்கள் சென்றடைந்துள்ளன. இதன்மூலம் திருமணமான பெண்கள்கூட மேற்கண்ட இனங்களில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது. சுகாதாரப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் ஆகிய அனைவரும் மேற்கண்ட முக்கிய தகவல்கள் அளிப்பதில் மிகக்குறைந்த அளவில் பங்காற்றியதாக இளைஞர்கள் கூறினார்கள்.

ஐந்தில் ஒரு இளம் ஆணும் ஆறில் ஒரு இளம் பெண்ணும் குடும்ப வாழ்க்கை அல்லது பாயல் கல்வித்திட்டங்களில் பள்ளிக்குள்ளோ அல்லது வெளியிலோ கலந்துகொண்டதாகத் தெரிவித்தனர். மேலும், பாயல் கல்வி இளைஞர்களுக்கு அளிக்கபபடவேண்டும் என்பதில் இளைஞர்கள் பேராதரவாக இருக்கிறார்கள். குறிப்பாக இந்தக் கல்வியை ஆசிரியர்களிடமிருந்தும், ஒருசில நண்பர்களிடமிருந்தும், சுகாதாரப் பணியாளர்களிடமிருந்தும் மற்றும் அனுபவம்வாய்ந்த திறனாளிகளிடமிருந்து பெறப்படவேண்டும் என்று குறிப்பிடுகின்றனர். குடும்ப வாழ்க்கை அல்லது பாயல் கல்வி பெற்ற இளைஞர்களிடையே கருத்தடை சாதனங்கள் பற்றிய ஆழ்ந்த விழிப்புணர்வும் எச்.ஐ.வி பற்றிய போதுமான அறிவும் இந்தக்கல்வி பெறாதவர்களைவிட அதிகமாக உள்ளது என்று ஆய்வறிக்கை கூறுகிறது.

**Percentage of youth who received family life or sex education, Tamil Nadu, 2006**




**Percentage of youth reporting knowledge of selected sexual and reproductive health matters according to whether they had or had not received family life or sex education, Tamil Nadu, 2006**




*Note: FLE: Family life or sex education.*

## திருமணத்திற்குமுந்தைய காதல் உறவுகள்

திருமணத்திற்குமுன் ஆணும் பெண்ணும் உறவாடுவது தடுக்கப்பட்டபோதிலும் திருமணத்திற்குமுன் காதல் உறவுகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. குறிப்பிடத்தக்க சிறு அளவிலான (25 முதல் 28 சதவிகிதம் வரை) இளம் ஆண்களும் பெண்களும் காதல் உறவுகளை வளர்த்துக்கொள்ள முன்வந்து விருப்பம் தெரிவித்தனர். 23 சதவிகித இளம் ஆண்களும் 15 சதவிகித இளம் பெண்களும் காதல் உறவுகளில் பங்கேற்றதாகத் தெரிவித்தனர். காதல் உறவில் ஈடுபடுபட்டவர்களில் ஆண்களில் 18 வயதிலும் பெண்களில் 16 வயதிலும் காதல் உறவு வளர ஆரம்பித்ததாகவும், அவை பெற்றோரிடம் மறைக்கப்பட்டதாகவும் ஆனால் நண்பர்களுக்குத் தெரியும் என்றும் விளங்குகிறது.

**Percentage of youth who had made or received a "proposal" for romantic partnership formation and percentage who had an opposite-sex romantic partner, Tamil Nadu, 2006**




M=Men; W=Women; MM=Married men; MW=Married women; UM=Unmarried men; UW=Unmarried women

இளைஞர்களில் பெரும்பலானோர் காதலன் / காதயோடுலி கை கோர்த்ததாகக் கூறினாலும் ஒருசிலர் மட்டும் மிகவும் நெருக்கமாக இருந்ததாகக் கூறினர். 74 சதவிகித இளம் ஆண்கள் தங்கள் காதயுடன்லி கை கோர்த்திருந்தனர். நான்கில் ஒரு பகுதியினர் உடலுற வில் ஈடுபட்டுள்ளனர். இளம் பெண்களில் ஐந்தில் மூன்றுபேர் தங்கள் காதலனுடன் கை கோர்த்திருந்ததாகவும் 10 சதவிகித இளம் பெண்கள் உடலுறவில் ஈடுப்ட்டதாகவும் கூறினார்கள். நீண்டகால பொருப்பு பற்றிய எதிர்பார்ப்பில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு வெளிப்படுகிறது. அதாவது இளம் பெண்கள் இளம் ஆண்களைவிட இந்த காதல் உறவுகள், திருமணத்தில் முடிய வேண்டும் என்று நினைக்கின்றனர். காதலர்களிடையே பாதுகாப்பான உலுறவு பற்றிய விழிப்புணர்வு மற்றும் பரஸ்பரம் புரிந்துகொள்ளுதல் ஆகியவை அறிதாகக் காணப்பட்டது, உடலுறவில் அனுபவமடைந்த பெருவாரியான இளைஞர்கள் பாதுகாப்பற்ற உடலுறவில் ஈடுபட்டுள்ளனர். காதலுடன் உடலுறவில் ஈடுபட்ட பெண்களில் மூன்றில் ஒருபகுதியினர் தாங்கள் விரும்பாமலேயே உடலுற வில் ஈடுபட்டதாகக் கூறினார்கள்.

## திருமணத்திற்கு முந்தைய உடலுறவு அனுபவங்கள்

மொத்தத்தில் 9 சதவிகித இளம் ஆண்களும் 2 சதவிகித இளம் பெண்களும் திருமணத்திற்கு முன் காதல் சார்ந்த அல்லது பிற வகைகளில் பாயல் உறவு வைத்திருந்ததாகத் தெரிவித்தனர். பொதுவாக, வாழ்க்கைப்பட்டியல் கணக்கீடுகளின்படி (Life Table) திருமணத்திற்கு முன்னர் உடலுறவில் ஈடுபடுவது, இளவயதினர் பருவ வயதிற்கு மாறும் காலத்தில் அதிகரிக்கிறது. இந்த அதிகரிப்பு ஆண்களிடம் தீவிரமாகவும், பெண்களிடம் மிதமாகவும் காணப்படுகிறது. அதிலும் குறிப்பாக பாலியல் உறவின் ஆரம்பநிலை நகர்புற இளைஞர்களைக்காட்டிலும் கிராமப்புற இளைஞர்களிடையே சற்று முன்னதாகத் தொடங்குகிறது.

**Percentage of youth reporting pre-marital sex, according to residence, Tamil Nadu, 2006**




M=Men; W=Women

திருமணத்திற்கு முன்னரே உடலுறவில் அனுபவமுள்ள பெரும்பாலான ஆண்கள், பெண்கள் தங்களுடைய காதலன் அல்லது காதயுடன் உடலுறவு கொண்டதாக கூறினர். இருந்தும், ஆண்கள் விலைமாதுகளுடனும், திருமணமான பெண்களுடனும், அவ்வப்போது கிடைக்கும் பெண்களுடனும் உடலுறவு வைத்திருந்ததாகக் கூறினார்கள். உடலுறவு வைத்திருந்த மூன்றில் ஒரு ஆணும் பெண்ணும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் உடலுறவு கொண்டதாக கூறினார்கள். மேலும் தொடர்ச்சியாக ஆணுறை உபயோகிப்பவர்கள் மிகவும் குறைவு. வெறும் 5 சதவிகித பாலியல் அனுபவமுள்ள இளைஞர்கள் மட்டும் (இளம் பெண்கள் ஒருவர்கூட இல்லை) திருமணத்திற்குமுன்பு உடலுறவு கொள்ளும்போதெல்லாம் ஆணுறை உபயோகித்ததாக தெரிவித்தனர்.

இளைஞர்கள், குறிப்பாக இளம் பெண்களும், திருமணமாகாத இளம் ஆண்களும், ஆய்வு மேற்கொள்ளும்போது தங்கள் பாலியல் உறவு அனுபவங்களை வெளிப்படுத்தமாட்டார்கள் என்பதை ஏற்றுக்கொண்டோம். ஆனால் இளைஞர்கள் ஆய்வு அனுபவம் குறிப்பிடுவது என்னவென்றால், நேரடி மற்றும் மறைமுக கேள்விகள் (மூடப்பட்ட கவர் வாயிலாக) கேட்கப்பட்டால் திருமணத்திற்கு முந்தைய உடலுறவு பற்றிய விபரங்கள் நேரடி கேள்விகள் மூலம் பெறப்படும் விபரங்களைக் காட்டிலும் கூடுதலாக இருக்கும் என்பதே. திருமணத்திற்குமுன் இருந்த உடலுறவு பற்றி நேர்காணல் வெளிப்படுத்த விரும்பாத இளம் ஆண்கள் மற்றும் பெண்களிடத்தில் விபரங்களைப்பெற மூடி, முத்திரையிடப்பட்ட கடிதம் மிக்க பயனுள்ளதாக அமைந்தது.

## திருமண காலகட்டத்திற்கு மாறுதலும் மற்றும் ஆரம்பகால திருமண வாழ்க்கையும்

ஆய்வறிக்கை தெரியவருவது என்னவென்றால் தமிழகத்தில் இயல்பாகவே சராசரியான திருமண வயது அதிகரித்துள்ளது. மிகவும் அறிதாகக எங்கேயாவது ஒரு இளம் ஆணும் மற்றும் 20 முதல் 24 வயதுவரையுள்ள ஐந்தில் ஒரு பகுதி இளம்பெண்களும் (18%) பதினெட்டு வயதிற்குமுன்னரே திருமணம் செய்துகொள்கின்றனர். பெரும்பாலான திருமணமான இளைஞர்கள் தங்களுடைய திருமணம் பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம்தான் என்றும் ஐந்தில் ஒருபகுதி இளம்பெண்களும் ஆண்களும் தங்களுடைய திருமணம் காதல் திருமணம் என்றும், மேலும் நான்கில் மூன்று பகுதி இளைஞர்கள் தங்கள் வாழ்க்கை துணையை தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் தங்களுக்குக் கொடுக்கப்பட்டது என்றும் தெரிவித்தனர். அதுபோலவே திருமணத்திற்கு முன்பே பெரும்பாலோனோர் தங்கள் வாழ்க்கைத் துணையை ஓரளவிற்கு அரிந்திருந்தபோதிலும் ஐந்தில் ஒருபகுதி இளம் ஆண்களும், மூன்றில் ஒருபகுதிக்குமேல் இளம் பெண்களும் தங்கள் வாழ்க்கைத்துணையை திருமணநாள் அன்றுதான் சந்தித்தார்கள். மேலும் 84 சதவிகித இளம் ஆண்களும் 88 சதவிகித இளம் பெண்களும் தங்கள் திருமணத்தின்போது வரதட்சிணை தரப்பட்டதாக தெரிவித்தார்கள். திருமணத்திற்கு முன்பே தங்கள் வாழ்க்கைத் துணை யார் என்று தெரிந்திருந்தபோதிலும், தாங்கள் யாரை திருமணம் செய்துகொள்ளப் போகிறார்கள் என்பதை முடிவு செய்திருந்த போதிலும் பெருவாரியானவர்களிடம் திருமண வாழ்க்கையில் எதிர்பார்ப்புகள் என்ன என்ற விழிப்புணர்வு குறைந்து காணப்பட்டது. மூன்றில் இரண்டு பங்கு இளம் ஆண்களும், நான்கில் மூன்று பங்கு இளம் பெண்களும் திருமண வாழ்க்கைக்கு எதை எதிர்பார்க்க வேண்டும் என்ற விழிப்புணர்வு இல்லாமல் இருந்துவிட்டதாக தெரிவித்தனர்.

பெரும்பாலான இளைஞர்கள் தங்கள் வாழ்க்கைத் துணையுடன் பலவிஷயங்களில் கலந்துறையாடுவதாகக் காணப்பட்டது. இருந்தபோதிலும் ஐந்தில் இரண்டு

**Percentage of youth aged 20-24 who were married before selected ages, Tamil Nadu, 2006**



**Percentage of married young women reporting experience of physical and sexual violence perpetrated by their husband and percentage of married young men reporting perpetration of physical and sexual violence against their wife, Tamil Nadu, 2006**




MM=Married men; MW=Married women

பங்கு இளம் ஆண்கள் மற்றும் ஐந்தில் மூன்று பங்கு இளம் பெண்கள் மட்டுமே கருத்தடை சாதனங்கள் பற்றிய விஷயங்களை கலந்து பேசிக்கொண்டார்கள். உடல் ரீதியாக துன்புறுத்துவதும், பலாத்காரமாக உடலுற வு கொள்வதும் திருமணமானவர் களிடையே உள்ளதாக சில இளைஞர்கள் தெரிவித்தனர். உதாரணமாக நான்கில் ஒரு பங்குக்குமேல் இளம் பெண்கள் எப்போதாவது தங்கள் கணவனால் உடல் ரீதியாக துன்புறுத்தப்படுவதாகத் தெரிவித்தனர். அதிக சதவிகித இளம் ஆண்கள் (34%) தங்கள் மனைவியை உடல் ரீதியாக துன்புறுத்துவதாகவும் தெரிவித்தனர். தற்பொழுதும்கூட உடல்ரீதியான துன்புறுத்தல்கள் நடைபெறுவதாக நான்கில் ஒருபகுதி இளம்பெண்களும், அதை ஒப்புக்கொள்வாக 31% இளம் ஆண்களும் தெரிவித்தனர். பாலியல் கொடுமைகளைப்பற்றியும் தெரிவித்தார்கள். மேலும் ஐந்தில் ஒருபகுதி இளம் பெண்கள் திருமணத்திற்குப்பின் முதல் உடலுறவு வற்புறுத்தி செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்கள். பதினைந்து சதவிகித இளம் ஆண்கள் தங்கள் மனைவியை வற்பறுத்தி உடலுறவு கொள்வதாகவும், 25% இளம் பெண்கள் எப்போதாவது தங்கள் கணவரின் வற்புறுத்தன்பேரில் உடலுறவு கொள்வதாகவும் தெரிவித்தனர்.

கணவனோ, மனைவியோ தங்களுக்கிடையே உள்ள உடலுறவைத் தவிர்த்து வெளியிலும் உடலுறவு வைத்துள்ளார்களா என்று ஆழ்ந்த ஆய்வு செய்யவில்லை என்றாலும் இங்கு கிடைத்துள்ள புள்ளிவிவரப்படி நான்கு சதவிகித இளம் ஆண்கள் தங்கள் மனைவியைத் தவிர பிற பெண்களுடன் உடலுறவு கொள்வதாகத் தெரிவித்தனர். மாறாக, எந்த இளம் பெண்களும் தங்கள் கணவரைத்தவிர பிற ஆண்களிடம் உடலுறவு கொண்டதாகத் தெரியவில்லை.

## கருத்தடை சாதனங்கள் உபயோகித்தலும் கருவுற்ற அனுபவங்களும்

திருமண வாழ்க்கையில் 18 சதவிகித இளம் ஆண்களும் 21 சதவிகித இளம் பெண்களும் கருத்தடை முறைகளை சிலசமயம் உபயோகிப்பதாகத் தெரிவித்தனர். 16 சதவிகித இளம் ஆண்களும், 17 சதவிகித இளம் பெண்களும் மட்டுமே நேர்காணன்போது கருத்தடை சாதனங்கள் உபயோகித்ததாகத் தெரிவித்தார்கள். குறைந்த சதவிகிதத்தினர் கருத்தடை சாதனங்கள் உபயோகிப்பதற்கு திருமண வயது அதிகரித்திருப்பதே முக்கிய காரணமாகலாம். கருத்தடை முறைகளைப் பற்றி ஆராயும்போது பெரும்பாலானோர் நிரந்தர கருத்தடை மேற்கொள்கின்றனர். 9முதல் 10 சதவிகித இளம் ஆண்களும் பெண்களும், பெண்கள் அறுவை சிகிச்சையை பயன் படுத்துவதாகத் தெரிவித்தார்கள். 6 முதல் 7 சதவிகித இளம் ஆண்களும், பெண்களும் தாற்காக கருத்தடைமுறைகளை

உபயோகிப்பதாகத் தெரிவித்தனர். அதிக அளவில் பயன்படுத்தப்பட்ட தற்காக கருத்தடைமுறைகள் – ஆணுறை, கருத்தடை வளையம், முதயனவாகும்.. 3 சதவிகிதத்திற்கும் குறைவான இளைஞர்கள் முதல் குழந்தையை தாமதப் படுத்துவதற்காகக் கருத்தடை சாதனங்களை உபயோகித்ததாகத் தெரிவித்தார்கள். பெண்களில் குறைந்தது ஒருமுறை கருத்தரித்த பெண்ணும், திருமணமான இளைஞனின் கருத்தரித்த மனைவியும் திருமணமான ஆறுமாதத்திற்குள் ஒருமுறை கருவுற்றதாகக் கூறினார்கள். ஒன்று முதல் இரண்டு சதவிகித ஆண்களும் 10 முதல் 13 சதவிகித பெண்களும் தாங்கள் உத்தேசித்த காலத்திற்கு முன்னரோ அல்லது விருப்பமில்லாமலோ கருத்தரித்தார்கள் என்றும் தெரிவித்தார்கள்.

முதல் குழந்தை பிறப்பைப் பற்றி கருத்து தெரிவிக்கையில் பெரும்பாலான குழந்தைகள், மருத்துவ மனைகளிலேயே (81–84%) பிறந்தது என்றும் மற்றும் பெரும்பாலான பெண்கள் (93%) பயிற்சி பெற்ற வர்கள் பிரசவம் பார்த்ததாகவும் தெரிவித்தார்கள்.

**Percentage of married youth reporting lifetime and current use of contraceptive methods within marriage, Tamil Nadu, 2006**




MM=Married men; MW=Married women

ஆண்குழந்தையை விரும்புவதாக வெளிப்படையாக தெரிந்தது. பதிலளித்தவர்கள் அனைவரும் தங்களுக்கு ஒரு ஆண்குழந்தையும், ஒரு பெண் குழந்தையும் தேவை என்று தெரிவித்தபோதிலும் இரண்டிற்கு மேல் குழந்தைகள் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள், பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகளையே விரும்புவதாகத் தெரிவித்தனர்.

## புகையிலை மற்றும் போதைப் பொருட்கள் உபயோகித்தல்

23 முதல் 25 சதவிகித ஆண்கள் புகையிலை மற்றும் மது உட்கொள்ளும் பழக்கம் உள்ளவர்களாக இருப்பதாக இந்த ஆய்வின்மூலம் தெரியவருகிறது. 0.3 சதவிகித இளம் ஆண்கள் போதை மருந்து உபயோகிப்பதாகவும் தெரிவித்தனர். எந்த போதைப்பொட்களை உபயோகிப்பதாக என்று அரிதாக ஒருசில இளம் பெண்கள் தெரிவித்தார்கள்.

## உடல்நலம் பெற்றுக்கொள்ளும் பழக்கவழக்கங்கள்

பொதுவாக இளமைப்பருவம் வாழ்க்கையில் உடல்நலமிக்க பருவமாக இருந்தாலும் குறிப்பாக மிகச் சிலரே, பொதுவான, மனரீதியான, பாலியல் மற்றும் இனப்பெருக்க நலப் பிரச்சினைகளை நேர்காணலுக்கு முன்பே அனுபவித்து வருவதாகத் தெரிவித்தனர். உதாரணமாக 18 சதவிகித இளைஞர்களும் 33 சதவிகித இளம்பெண்களும் அதிக காய்ச்சலை அனுபவித்ததாகவும் 2 சதவிகித இளம் ஆண்களும் 21 சதவிகித இளம் பெண்களும் தங்களுக்கு இனவிருத்தி உறுப்புகளில் தொற்றுநோய் கிருமிகளின் தாக்குதல் அறிகுறி இருப்பதாகவும் தெரிவித்தனர். மேலும் பத்தில் ஒரு இளம் பெண்ணுக்கு மாதவிடாய் பிரச்சினைகள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அதேசமயம் மூன்றில் ஒரு இளைஞர் இரவு நேரங்களில் விந்தணு வெளியாவதைப்பற்றி



கவலைப்பட்டார்கள். இறுதியாக 13 சதவிகித இளம் ஆண்களிடமும் 10 சதவிகித இளம் பெண்களிடமும் மனநிலை பாதிக்கப்பட்டதற்கான அறிகுறிகள் இருப்பதை ஆய்வு வெளிப்படுத்துகிறது.

பொதுவான பாலியல் மற்றும் இனப்பெருக்க நலப் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதைப்பற்றி பார்க்கும்போது, பிரச்சினையின் வகையைப் பொறுத்து அதன் தன்மைகள் மாறுகின்றன. பெரும்பான்மையான இளைஞர்கள் அதிகக் காய்ச்சல் அவதிப்படும்போது சிகிச்சை பெற்றுக்கொண்டார்கள். ஆனால் வெகுசிலர் மட்டுமே பாலியல் மற்றும் இனப்பெருக்கப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தி சிகிச்சை பெற்றுக் கொண்டார்கள். சிகிச்சை பெற்றவர்களில் பெரும்பகுதியினர் நோயின் தன்மையைப்பற்றிக் கருதாமல் தனியார் மருத்துவ மனைகளில் அல்லது மருத்துவர்களிடம் ஆலோசனை மற்றும் சிகிச்சை பெற்றுக்கொண்டார்கள். எனினும் இரவு நேரங்களில் விந்தணு வெளியாவதால் ஏற்படும் பயத்தைப்பற்றி இளைஞர்கள் சுகாதாரப்பணியாளர்களிடம் எப்போதாவது ஆலோசனை பெற்றுக்கொண்டார்கள். தங்கள் நண்பர்களுடன் இதைப்பற்றி கலந்து ஆலோசிப்பதில் முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

இளைஞர்கள் பாலியல் மற்றும் இனப்பெருக்க நலச் சேவைகள் பெறுவதில் சங்கடப்படுவதாக கண்டுபிடிப்புகள் கருத்து தெரிவிக்கின்றன. திருமணமான இளம் ஆண்களில் சிறுபகுதியும் திருமணமாகாத இளம் ஆண்களில் பெரும்பகுதியும் எல்லா இளம்பெண்களும் பாலியல் மற்றும் இனப்பெருக்க பிரச்சினைகளுக்குத் தகுந்தமுறை யில் சிகிச்சை பெருவதில் மிகுந்த சிரமப்பட்டார்கள்.

இறுதியாக மிகச் சிறிய அளவிலான இளைஞர்கள் தாங்கள் எச்.ஐ.வி. பரிசோதனை செய்துகொண்டதாகத் தெரிவித்தார்கள். அதாவது (10-13% திருமணமானவர்களும் 1-3% திருமணமாகாதவர்களும்). திருமணத்திற்கு முன்பே எச்.ஐ.வி. பரிசோதனை செய்துகொள்வதை இளைஞர்கள் பெருமளவிற்கு வரவேற்கி றார்கள்.

## சமூக சேவையில் கலந்து கொள்ளுதலும் அரசியல் வாழ்க்கையும்.

இளைஞர்களுடைய திறமையை வளர்த்துக் கொள்வதற்காக பலவிதமான திட்டங்கள் செயல்பட்டபோதிலும், ஒருசில இளைஞர்கள்மட்டும் (ஐந்தில் ஒருபகுதி இளம் ஆண்களும் ஐந்தில் இரண்டுபகுதி இளம் பெண்களும்) அரசு அல்லது தனியார் தொண்டு நிறுவனங்களால் அறிவிக்கப்பட்ட சமுதாய அளவில் இளைஞர்கள் பங்கேற்கக்கூடிய திட்டங்களைப்பற்றி தெரிந்துள்ளதாக தெரிவித்தார்கள். வெகு குறைவான - 14% இளம் ஆண்களும் 9% இளம் பெண்களும் - மேற்கண்ட திட்டங்களில் பங்கேற்றதாகத் தெரிவித்தார்கள். அதிக அளவில் 52% இளம் ஆண்களும் 13% இளம் பெண்களும் சமுதாய அளவில் செயல்படும் சுற்றுப்புற சுகாதார முகாம்கள், தேசிய மற்றும் விழாக்கால கொண்டாட்டங்களில் பங்கேற்றதாகத் தெரிவித்தனர். இறுதியாக 12% இளம் ஆண்களும் 16% இளம் பெண்களும் சீரமைக்கப்பட்ட குழுக்களில் அங்கத்தினர்களாக இருப்பதாகத் தெரிவித்தார்கள்.

தேர்தல் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களில் 82% இளம் ஆண்களும் 66% இளம் பெண்களும் சமீபத்தில் நடைபெற்ற தேர்தல் வாக்களித்ததாகத் தெரிவித்தார்கள். திருமணமான 91% இளம் ஆண்களும் திருமணமாகாத 82% இளம் ஆண்களும், மூன்றில் இரண்டுபங்கு திருமணான மற்றும் திருமணமாகாத இளம் பெண்களும் மேற்கண்ட தேர்தல் வாக்களித்தனர். பெரும் பாலான இளைஞர்கள், தேர்தல் நியாயமான முறையில் நடை பெற்றதாகவும், பயமின்ற வாக்களிக்க அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர். மற்றும் 64% முதல் 73% வரை இளைஞர்கள் எந்த அரசியல் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சமூக மாற்றம் ஏற்படாது என்று நினைக்கிறார்கள்.

பொதுவாக 97%க்கு மேற்பட்ட இளைஞர்கள் தாங்கள் பிற மதத்தவருடனும், பிறசாதியினருடனும் தாராளமாக கலந்து பேச முடிகிறது என்று கூறினர். எனினும், 50% இளம் ஆண்களும் மற்றும் குறிப்பிடத்தக்க

சில இளம் பெண்களும், அவர்களது மதத்தை இழிவுபடுத்துபவர்களை பழிவாங்குவதைவிட பொருத்துக் கொள்வதே சிறந்தது என்று ஒப்புக்கொள்கின்றனர். கிராமப்புற இளைஞர்கள் மற்றவர்களைவிட மிகவும் குறுகிய மனப்பான்மையுடன் இருப்பதாக ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. அதேபோன்று இளம் பெண்களில் திருமணமானவர்கள் திருமணமாகாதவர்களைவிட மேற்சொன்ன மனப்பான்மையுடன் இருக்கிறார்கள்.

**Percentage of youth aged 20 or above who voted in last election, Tamil Nadu, 2006**




கணிசமானபகுதி இளம் ஆண்களும், பெண்களும் தங்கள் கிராமங்களிலும், நகரங்களிலும் ஆண்களும் மற்றும் பெண்களும் ஒருவரோடொருவர் அடிதடி சண்டை செய்ததாகத் தெரிவித்தார்கள். இருந்தாலும் 10% இளம் ஆண்களும் 3% இளம் பெண்களும் நேர்காணலுக்கு முந்தைய வருடத்தில் சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டதாகத் தெரிவித்தார்கள்.

மாநிலத்தில் வேலை தேடுவது மிக முக்கிய பிரச்சினை என்று 69% இளம் ஆண்களும் 49% இளம் பெண்களும் கூறினார்கள். மேலும் 10% இளம் ஆண்களும் 14% இளம் பெண்களும் வறுமையை முக்கியப் பிரச்சினையாகக் கூறினார்கள். மேலும் 9% இளம் பெண்கள் கூடவே போதிய அடிப்படை வசதிகள், கட்டமைப்பு இல்லாததை முக்கிய பிரச்சினையாகத் தெரிவித்தார்கள்.

## திட்டங்களுக்கான பரிந்துரைகள்

மேற்சொன்ன பகுதிகளில் காணப்பட்டவை கோடிட்டுக் காட்டுவது என்னவெனில் இளைஞர்கள் பருவ வயதிற்கு மாறும்போது எண்ணற்ற சவால்களை சந்திக்கிறார்கள் என்பதாகும். இந்த சவால்களே இளைஞர்களிடமும், குடும்ப அளவிலும் மற்றும் சேவையளிக்கும் அளவிலும் பலவிதமான திட்டங்கள் தேவை என்பதை கோடிட்டுக்காட்டுகிறது. இந்த ஆய்வறிக்கையின் மூலமாக வெளிவந்த முக்கிய திட்டப் பரிந்துரைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### *உயர்நிலைப்பள்ளி முடித்தல் உள்ள இடர்பாடுகளை எதிர்கொள்ளுதல்*

தமிழகத்தில் இளைஞர்கள் இளமைப்பருவத்தின் பெரும்பாலான காலத்தை கல்வி கற்பதில் செலவழித்த போதிலும் 2015ஆம் ஆண்டில் உயர்நிலைப்பள்ளிப் படிப்பை தமிழகம் முழுவதிலும் உள்ள இளைஞர்கள் பெறவேண்டும் என்ற இலக்கை எட்ட முழுமையான முயற்சி தேவைப்படுகிறது. 8ஆம் வகுப்பிற்குப்பின்னர் உயர்நிலைப் பள்ளிப்படிப்பை முடிப்பதில் குறிப்பிடத்தக்க தொய்வு இருப்பதும் அதற்கான தடைகளை நீக்கவேண்டிய அவசியத்தையும் தெரியப்படுத்துகிறது. இவைகளில் முன்னிற்பது பொருளாதார நெருக்கடி, மனோநிலை, மற்றும் புறிந்துகொள்ளும் திறன் மற்றும் பள்ளி சம்பந்தப்பட்ட காரணங்கள். இந்தத் தடைகளை நீக்க பலமுனைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். உதாரணத்திற்கு பொருளாதார நெருக்கடி காரணமாக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் வேலைக்கு அனுப்பும் நிலைமையை மாற்ற முயற்சிகள் எடுக்கவேண்டும். பள்ளிச்செலவைக் குறைக்க அனேக அரசுத்திட்டங்கள் உள்ள போதிலும் பொருளாதாரத்தில் பின்தங்கியோர் பள்ளிப்படிப்பை முடிப்பதை ஊக்குவிக்கும்விதமாக கூடுதலாக மானியம் வழங்குவது குறித்தும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். மேலும், அரசுத்திட்டங்கள் தேவைப்படுவோர்களுக்குக் கிட்டுகிறதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அதேசமயம் தங்கள் குழந்தைகளின் எதிர்கால வாழ்வாதாரத்திற்கு

உயர் கல்வியின் முக்கியத்துவம் குறித்து பெற்றோர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படவேண்டும்.

பள்ளியளவில் உள்ள தடைகளான குறிப்பாக, மோசமான கட்டமைப்பு, கல்வித்தரம், பள்ளித்தேர்வுகளில் தோல்வியடைதல் போன்றவைகளை அகற்றும்விதமாக செயல்படவேண்டும்.

திட்டங்கள் கல்வி, வேலைவாய்ப்பு எதிர்பார்ப்புகளை மேன்மைப்படுத்துவதாக இருக்கவேண்டும். திட்டங்கள், எந்தத்துறையில் தேவையுள்ளதோ அவற்றில் அவர்கள் தங்களது திறமையை வளர்த்துக்கொள்ள வாய்ப்பு அளிப்பதாக இருக்கவேண்டும். இதனைச் செயலாக்குவதற்கான திட்டங்கள் பள்ளியளவில் தொழிற்கல்வி பயிலுவதற்கான ஏற்பாடுகள் செய்துதரக்கூடியதாக இருக்கவேண்டும். மேலும் பள்ளிப்பருவத்தில் கல்வியை மேம்படுத்தும் வகையில் திட்டங்கள் தீட்டப்படவேண்டும். இதன்மூலம் ஆசிரியர்களுக்கு மேம்பட்ட பயிற்சியும் அவர்களை பொருப்பாக்கும் விதமாக அமையவேண்டும்.

நாட்டின் பிறபகுதிகளில் நிலவும் பிளவைப்போல தமிழகத்தில் பள்ளிப்படிப்பில் ஆண் பெண் பாகுபாடு காணப்படவில்லை. இருந்தாலும் கணிசமான திருமணமான ஆண்களும் பெண்களும் கல்வியை மேற்கொண்டு தொடர்வதில் பிரதிகூல நிலையில் உள்ளார்கள் என்பதை ஆய்வு குறிப்பிடுகிறது. அத்தகையவர்களுக்கு கல்வியைத்தொடர்வதற்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுக்கும் விதமாக தலையீடுகள் தேவை. அதுபோலவே கல்வி வாய்ப்பில் நகர்புற இளைஞர்களைவிட கிராமப்புற இளைஞர்களுக்கு மிக அதிகமாக பிரதிகூல நிலை உள்ளதால் அத்தகையவர்களுக்குப் பள்ளிப்படிப்பை முடிக்க வாய்ப்புகள் வழங்கும் விதமாக செயல்படவேண்டும்.

## *இளைஞர்கள் வேலை வாய்ப்பை சாத்தியமாக்குதல்*

5ல் ஒரு இளம் ஆணும், 6ல் ஒரு இளம் பெண்ணும் சிறுவர்களாக இருந்தபோதே வேலையில் ஈடுபடுத்தப்பட்டார்கள். ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரையான நிதி உதவி மற்றும் மானியம் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவ மாணவியருக்கு அளிக்கப்படவேண்டும். இது, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வேலைக்கு அனுப்பாமல் பள்ளிக்கு அனுப்ப ஊக்கமளிக்கும்.

குறிப்பாக படித்தவர்களிடையே அதிகமாகக் காமப்படும் வேலை இல்லை என்ற நிலை இளைஞர்களுடைய திறமைகளுக்கும் வேலை வாய்ப்புத்துறையில் நிலவும் நிலவரத்திற்கும் தொடர்பின்மையைக் காட்டுகிறது. உண்மையில் ஒருசில இளைஞர்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்பைப் பெருக்கும் திட்டங்களைப்பற்றி தெரிந்திருக்கிறது. மேலும் ஒருசிலர் தொழில் செயவதற்குக் கிட்டும் தொழிற்பயிற்சியும் பெற்றிருக்கிறார்கள். நகரத்து இளைஞர்கள் கணினி பயிற்சி, ஆங்கில மொழித்திறமை ஆகியவற்றைப்பற்றி குறிப்பிட்டபோதிலும் கிராமத்து இளைஞர்கள் தங்களது குடும்பத்தொழில் கவனம் செலுத்துபவர்களாக காணப்படுவதும் மேற்படி துறைகளில் தற்போது தேவைப்படும் தேவைக்கேற்ப தங்கள் திறமையை வளர்த்துக் கொள்ளாமலோ அல்லது எந்தத் துறை யிகளில் தேவையுள்ளதோ அவைகளில் தங்கள் திறமையை வளர்த்துக்கொள்ளாமலோ இருப்பதை ஆய்வில் காணலாம். குறிப்பாக கிராமப்புற இளைஞர்களிடையே தற்போது நிலவும் தேவைக்கேற்றபடி அவர்களுடைய திறமையை வளர்த்துக்கொள்ளும் விதமாக செயல்நுட்பத் திறன்கள் உருவாக்கப்படவேண்டும். அது தகுதியான இளைஞர்களை தற்போது நிலவும் வாய்ப்புகளுடன் இணைப்பதாக இருக்கவேண்டும்.

## *வலைத்தளத்தில் இளைஞர்களுடைய ஈடுபாட்டை அதிகரிக்க வகை செய்தல்*

ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்கள் கல்விகற்றவர்களில், நான்கில் ஒருபங்கு இளம் ஆண்கள் மற்றும் ஏழில் ஒருபங்கு இளம்பெண்கள் – குறிப்பாக நகர்ப்புறங்களில் – தங்களுக்கு இணையதள தொடர்பு இருந்ததை முக்கியமாக குறிப்பிட்டனர். இந்த ஆய்வு குறிப்பிடுவது, இணையதளம் வாயிலாக இளைஞர்கள் அவர்களைச்

சுற்றியுள்ள உலகத்தைப் பற்றியும் அவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகள் பற்றியும் அறிந்துகொள்வதற்கு தெரியப்படுத்தமுடியும் என்பதாகும். இளைஞர்களுக்கு இணக்கமான முறையில் தமிழில் அவ்வாறான இணையதளத் தகவல் தொடர்பை உறுவாக்கினால் அப்படிப்பட்ட தகவலை அவர்களிடம் கொண்டுசெல்ல முடியும்.

## *இளைஞர்களிடையே நிர்ணயிக்கும் திறன் மற்றும் பாலின சமத்துவ கொள்கைகளைப் பெருக்கிக்கொள்ளல்*

அன்றாட வாழ்க்கையில் கணிசமான பகுதி இளைய ஆண்கள் மற்றும் பெருவாரியான இளம் பெண்கள் முடிவெடுப்பதில்லை. நண்பர்களை தேர்ந்தெடுப்பது, உடைகள் வாங்குவது, பணம் செலவிடுவது போன்ற வற்றில்கூட அனைகமாக பாதியளவு இளம் ஆண்களும், நான்கில் மூன்று பங்கு இளம் பெண்களும் தாங்களாகவே முடிவு செய்ய இயலாதவர்களாக உள்ளதை ஆய்வு சுட்டிக்காட்டுகிறது. இளம் பெண்கள் தன்னிச்சையாக செயல்படவும், நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதிலும், சுதந்திரமும் சந்தர்ப்பமும் குறைந்தவர்களாக உள்ளார்கள். திருமணமான, திருமணமாகாதவர்கள் உட்பட இளைஞர்கள் வாழ்க்கையில் திறமையை வெளிப்படுத்தக்கூடிய கல்விக்கு உட்படுத்தப்பட்டால் அவர்கள் தங்களது வாழ்க்கையில் தெளிவான முடிவெடுக்கும் நிலை ஏற்படலாம் என்பதை இந்த ஆய்வு அறிவுறுத்துகிறது.

சமத்துவமற்ற பாலின மனப்பான்மை செயல்கள் இளம் பெண்களாலும் மற்றும் குறிப்பாக இளம் ஆண்களாலும் வெளிப்படுத்தப்பட்டது. ஏதாவது ஒரு சமயத்தில் மனைவி அடிப்பதை பாதிக்கும் மேற்பட்ட இளம் ஆண்களும் இளம் பெண்களும் நியாயப்படுத்துகிறார்கள். இளம் ஆண்களிடமும் இளம் பெண்களிடம் சமத்துவ கொள்கைகளை (எல்லோரும் சமம்) வளர்த்துக் கொள்ளவும் மற்றும் ஒவ்வொரு பிரிவு இளைஞர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யும் அளவுக்கும் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். மேலும் இந்த திட்டங்கள் அண்மை மற்றும் பெண்மையை பற்றிய புதிய பொது கருத்துக்களை இளைஞர்களிடையே வளர்க்கும்விதமாகவும், அதே நேரத்தில் அண் பெண் உறவு பற்றிய ஸமமான தகவல்களை வளர்க்கும் விதமாகவும் அமையவேண்டும்.

சமத்துவ ஆண் பெண்பற்றிய கருத்தை குறிப்பாக இளம் ஆண்கள் இளம் பெண்கள் உட்பட பாலியல் கொள்கைகளில் சமத்துவத்தை ஊக்குவிக்குவிதமாகவும் நிர்ணயிக்கும் விதமாகவும் பல்வேறுவகையான மாதிரி குறியீடுகள் அதிக அளவில் ஆய்வு செய்து பார்க்கப்பட்டு. இந்தக் குறியீடுகளை தேவைக்கேற்ப ஆய்வு செய்து செம்மைப்படுத்தவேண்டும்.

## *சேமிப்பு மனப்பான்மையை குறிப்பாக இளம் பெண்களிடம் அதிகரிக்க வாய்ப்பளித்தல்*

இளம் ஆண்களைவிட இளம் பெண்கள் செமிப்புபற்றி அதிக அளவில் தெரிவித்தாலும் சேமிப்புக் கணக்கு வைப்பதிலோ அல்லது அதை தனியாக செயல்படுத்துவதிலோ பெண்களுக்கு அதிகப்பங்கு இருப்பதாகத் தெரியவில்லை. அதே நேரத்தில் 13% இளம் ஆண்களும் 9% இளம் பெண்களும் வங்கி அல்லது தலால் அலுவலகத்தில் சேமிப்புக் கணக்கு வைத்துள்ளனர். இளைஞர்களிடையே சேமிப்பு மனப்பான்மையை மனதில் பதியவைக்க கவர்ச்சிகரமான ஊக்குவிக்கக்கூடிய திட்டங்களும் இளம் பெண்களிடையே சேமிப்பு பழக்கத்தை தனியாகவும் திறம்படவும் செயல்படுத்துதவதில் உள்ள தடைகளை நீக்கும் விதமாகவும் திட்டங்கள் தேவை.

## *சமூக மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் இளைஞர்களின்பங்கை ஊக்குவித்தலும் மற்றும் மதசார்பற்ற கொள்கைகளை பல்ப்படுத்துதலும்.*

இளைஞர்கள் நிலை பற்றிய ஆராய்ச்சி கீழ்க்கண்ட கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்துகிறது. இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் ஓட்டுப்போடும் உரிமையை நிலைநாட்டுகிறார்கள். சாதிசமய பாகுபாடின்றி

ஒருவருக்கொருவர் கலந்து பழகுவதை பெரும்பாலானவர்கள் ஆதரிக்கிறார்கள். ஒருசிலரே மதக்கலவரங்களில் ஈடுபடுகிறார்கள். இருந்தபோதிலும் எல்லா இளைஞர்களும் மதசார்பற்ற நடவடிக்கைகளை ஆதரிப்பதில்லை. பாதியளவு இளம் ஆண்களும் மற்றும் ஓரளவுக்கு அதிகமான இளம் பெண்களும் தங்கள் மதத்தை அவமதிப்பவர்களை தாக்க வேண்டும் என்று கூறுகின்றனர். மேலும் ஒருசிலர் மட்டும் அரசு மற்றும் அரசு சாராத நிறுவனங்களால் நடத்தப்படும் சமுதாய நல செயல்பாடுகளில் கலந்து கொள்கிறார்கள். பள்ளி கல்லூரி மற்றும் சமுதாய அளவில் தேசிய சேவை திட்டங்கள் மூலமாகவும் விளையாட்டு மற்றும் சாஸ்திர சம்பிரதாயமற்ற பிற நடைமுறைகள் மூலமாகவும் சமுதாய கட்டமைப்பை ஊக்கப்படுத்தவும் மதிப்பை உயர்த்தும் அங்கங்களை ஒருங்கிணைக்கவும் சாதி சமயமற்ற நிலையை ஊக்கப்படுத்தவும் பொருப்புள்ள குடிமகனாக உறுவாகவும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

## *பள்ளியில் தொடரும் மற்றும் தொடராத மாணவர்களுக்கு வாழ்க்கை கல்வி மற்றும் பாலியல் கல்வி அளித்தல்.*

பள்ளியில் கல்வியைத் தொடரும் மற்றும் பள்ளிப்படிப்பை தொடராத இணைஞர்களுக்கு, பாலியல் மற்றும் வாழ்க்கைக் கல்வி உடனடியாக தேவைப்படுகிறது. என்று ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கிறது. இளைஞர்களிடையே (திருமணமானவர்களையும் சேர்த்து) பாலியல் மற்றும் இனப்பெருக்க முறைகளை புரிந்து கொள்ளும் தன்மை ஓரளவே உள்ளது. பாலியல், மகப்பேறு, கருத்தடை முறைகள், பாலின நோய்கள், எச்ஐவி, எய்ட்ஸ், சட்டரீதியான கருக்கலைப்பு வசதிகள் முதய பெரும்பாலான தலைப்புகளில் இளைஞர்களிடையே தவற ான கருக்கலைப்பு வசதிகள் முதய பெரும்பாலான தலைப்புகளில் இளைஞர்களிடையே தவறான கருத்துகள் பெருமளவில் உள்ளன. எங்கேயாவது விழிப்புணர்வு இருக்குமேயானால் அது வெறும் மேலோட்டமாக மட்டுமே உள்ளது.

பாலியல் மற்றும் வாழ்க்கை கல்வியை அறிந்து கொள்ள இளைஞர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். இளைஞர்கள் மேற்கண்ட இனங்களின் தகவல் கல்வி தேவையை உணர்ந்து அவற்றை ஆசிரியர்களிடமிருந்தும், சுகாதார நலப்பணியாளர்களிடமிருந்தும், குறிப்பாக இளம் பெண்கள் பெற்றோர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ள விருப்பப்படுகிறார்கள். இது சம்பந்தமாக பள்ளியில் நடைபெறும் எய்ட்ஸ் கல்வி திட்டம் மற்றும் பள்ளிப்படிப்பை தொடராத இளைஞர்களுக்கான சிறப்பு திட்டங்கள் பல இருந்தபோதிலும், ஒரு சில இளைஞர்கள் மட்டுமே வாழ்க்கை மற்றும் பாலியல் கல்வியில் பங்கேற்றிருக்கிறார்கள் ஓரளவு கணிசமான திருமணமான இளம் பெண்களும் மற்றும் ஒருசில இளம் ஆண்களும் திருமண வாழ்க்கையில் எதை எதிர்பார்க் வேண்டும் என்று அறியாமல் திருமண வாழ்க்கையை மேற்கொள்கின்றனர். அதே சமயத்தில், பெரும்பாலான இளைஞர்கள் பாலியல் உறவுகளில் ஈடுபடுவதில் துணிந்து செயல்படுகின்றனர்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி, பெரும்பாலான மாநில அரசு திட்டங்கள் பாலியல் மற்றும் இனப்பெருக்க நலத் தகவல்களை இளைஞர்களுக்கு அளிப்பதில் மும்முரமாக செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இப்போது தேவைப்படுவது என்னவென்றால் பள்ளிப்படிப்பை தொடர்கிற மற்றும் தொடராத இளைஞர்களுக்கும், திருமணமான மற்றும் திருமணமாகாதவர்களுக்கும், கிராமப்புறத்தலும் மற்றும் நகர்புறத்திலும் மேற்கண்ட அரசு திட்டங்கள் சென்றடைய முயற்சி அவசியம். மேலும் நடைமுறையிலுள்ள வெறும் எச்.ஐ.வி. தொடர்பான விழிப்புணர்வு தகவல்கள் மட்டுமல்லாமல், பாலியல் மற்றும் இனப்பெருக்க தலைப்புகளில் இன்னும் விரிவான விழிப்புணர்வை அதிகரிக்கும் திட்டங்கள் தேவை. இந்தத் திட்டங்கள் இளைஞர்களிடையே வெறும் விழிப்பணர்வை ஏற்படுத்தமட்டுமல்லாமல் இளைஞர்கள் வாழ்க்கையில் சந்திக்கவிருக்கும் அபாயங்களை சரியாக உணர்ந்து அதற்கேற்றார்போல தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கவும் வடிவமைக்கப்படவேண்டும்.

மேலும் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பயிற்சியாளர்களாகிய பாலியல் மற்றும் இனப்பெருக்க விஷயங்களைப்பற்றி தவறான எண்ணங்களை நீக்கவும் இதைப்பற்றி

இளைஞர்களிடயே தெளிவாக்குவதில் உள்ள குழப்பங்களைப் போக்கவும் ஆசிரியர்கள், சுகாதார நலப்பணியாளர்கள் மற்றும் ஏனைய திறனாளிகள் அனைவரிடம் மேற்கண்ட விஷயங்களில் அவர்களுடைய தொழில்நுட்ப அறிவைப்பெருக்கவும் பயிற்சியளிக்கவேண்டும்.

## *பாலியல் வாழ்க்கையில் அடி எடுத்து வைப்பது பாதுகாப்பானது மற்றும் தேவையானதும் என்பதை உறுதி செய்தல்*

பெரும்பாலான இளம் பெண்களுக்கு பாலியல்தொடர்பு திருமண பந்தத்தில்தான் ஆரம்பித்தது என்றாலும், ஒரு சில இளம் ஆண்களும் பெண்களும் திருமணத்திற்கு முன்பே பாலியல் புண்ர்ச்சியில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவித்தார்கள். அநேக இளைஞர்கள் பாலியல் செய்கைகளைப் பற்றி அறிந்து கொள்ளாமலே அதில் ஈடுபட ஆரம்பிக்கிறார்கள். இந்த ஆய்வுகளுக்கு பாலியல் கல்வி அல்லது வாழ்க்கைக் கல்வி கொடுப்பதன் அவசியத்தை வயுறுபத்துகிறது. அநேக இளைஞர்களுக்கு, திருமணத்திற்கு முந்தைய திருமணத்திற்கு முந்தைய பாலியல் தொடர்புகள் பாதுகாப்பற்றதும் மற்றும் தேவையற்றதுமாக இருக்கிறது. எனவே, அவர்களிடையே பாலியல் மற்றும் இனப்பெருக்க நலம் தொடர்பான விழிப்புணர்வு எற்படுத்துவதிலும், இளைஞர்கள் தங்களது துணைவன்/ துணைவியுடன் இது தொடர்பாக கலந்துரையாடல் செய்வதூம் மற்றும் பாதுகாப்பான பாயல்தொடர்பு ஆகியவற்றில் பேச்சு வார்த்தை கொள்ளும்விதமாக திட்டங்கள் தேவை. அதேநேரத்தில், திருமண மற்றும் திருமணமாகாத இளம் பெண்களுக்கும் மற்றும் இளம் ஆண்களுக்கும் அவர்கள் ஏற்றுக்கொள்ளும் விதமாக குடும்பநல மற்றும் வியாதி தொற்றாத தடுப்பு சேவைகள் அளிப்பதில் திட்டங்கள் முக்கிய பங்கு வகிக்கவேண்டும்.

## *திருமண வாழ்க்கையில் சமநிலையற்ற அதிகார நிலவாத்தை எதிர்கொள்ளுதல்*

தமிழகத்தில் இளம் வயதிலேயே திருமணம் செய்வது வெகுஅரிதாக நடக்கிறது. பெரும்பாலான இளைஞர்கள் தங்களுடைய திருமணத்தைப் பற்றி முடிவெடுக்கும் அதிகாரம் உடையவர்களாவும் மற்றும் திருமணத்திற்குமுன்பே தங்களுக்கு நிச்சயப்பட்டவர்களிடம் மிகுந்த பரிச்சயம் உள்வைர்களாகவும் காணப்படுகிறார்கள். திருமண வாழ்க்கையில் பெரும்பாலானோர் தங்களுக்குள் தகவல் தொடர்பு சீராக இருப்பதாக தெரிவித்தாலும் கருத்தடை முறைகள் பற்றிய தகவல் கலந்துரையாடல் அவர்களிடையே வெகு குறைவாகவே உள்ளது. திருமண வாழ்க்கையில் அதிகாரம் செலுத்துவதில் ஆண் பெண் என்ற பேதம் காணப்படுகிறது. உதாரணமாக குறிப்பிடத்தக்க இளம் பெண்கள் தங்கள் கணவரால் பாலியல் மற்றும் உடல்ரீதியான வன்முறைக்கு ஆளாகிற ார்கள். திருமண கால ஆரம்ப கட்டத்திலேயே தம்பதியருக்குள் மிகவும் மென்மையான விஷயங்களில் உதாரணமாக கருத்தடை போன்ற விஷயங்களில் கூட தகவல் தொடர்பை ஊக்கப்படுத்தவும், இக்கட்டான கட்டங்களில் பேச்சுவார்த்தை மூலம் அதை சமாளிக்கவும் மற்றும் விட்டுக் கொடுக்கும் திறமையை வளர்க்கவும் முயற்சிகள் தேவைப்படுகிறது. மேலும் திருமணமான இளம் பெண்களிடையே அவர்களுடைய உரிமையை தங்களுடைய வாழ்க்கையில் உபயோகிக்க கூடிய சந்தர்ப்பத்தை அறிந்து கொள்ளும் விதமாக விழிப்புணர்வு ஏற்படுத்திட முயற்சிகள் தேவைப்படுகிறது. அதேசமயம், இளம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையே ஆண்மைத்தன்மை மற்றும் பெண்மைத்தன்மையை மேம்படுத்தும்விதமாகவும், தம்பதியரிடையே உறவு முறை களில் சமத்துவத்தை வளர்க்கவும், போதிய முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். மேற்கண்ட தேவைகளை வெளிப்படுத்தும்விதமாக நம்நாட்டில் மாதிரி குறியீடுகள் இருந்தபோதிலும், அவைகள் தேவைகேற்ப ஆய்வு செய்து செம்மைப்படுத்தப்பட வேண்டும்.

## *அனுகூலமான குடும்ப சூழ்நிலையை உருவாக்குதல்*

வளர்ந்துவரும் இளைஞர்கள் மற்றும் அவர்தம் பெற்றோர்களிடையே குறைவான கலந்துரையாடலும் ஒரு இடைவெளியும் காணப்படுவதாக ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. மேலும் இளைஞர்களின் நடவடிக்கைகளில் ஆண்

பெண் என்ற பேதம் பார்த்து பெற்றோர்கள் அதிகாரம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கு அனுகூலடமான ஒரு சூழ்நிலையை உருவாக்க முயற்சிகள் தேவை. பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளிடையே உள்ள இடைவெளியை குறைக்கவும், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடம் பான சமத்துவத்தை ஊக்குவிக்கவும் தேவையான திட்டங்கள் தற்சமயம் ஏதும் இல்லை என்றாலும், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடத்தில் பாயல் விவகாரங்களில் கலந்துரையாடல் செய்வதில் உள்ள சங்கடங்களை நிவர்த்தி செய்யவும், பிள்ளைகளிடத்தில் வெளிப்படையான கலந்துரையாடல் செய்வதை ஊக்குவிக்கவும், பிள்ளைகளை வளர்ப்பதில் ஆண் பெண் என்ற பேதம் பார்க்காமல் இருக்கவும் போதுமான திட்டங்கள் தேவை என்று ஆய்வறிக்கை கூறுகிறது.

## *திருமணமாகாத மற்றும் திருமணமான இளம் பெண்கள் ஆண்கள் அவர்களது தனிப்பட்ட தேவைகளை எதிர்கொள்ளும்விதமாக சேவைகளைத் திருத்தியமைத்தல்.*

இனப்பெருக்க மற்றும் குழந்தைகள் நல திட்டத்தின் கீழ் பல சிறப்பான திட்டங்கள் அனைத்து இளைய சமுதாயத்தினருக்காக செயல்படுத்தப்பட்டு வந்தபோதிலும் இந்த சேவைகள் இளைஞர்களை சென்ற டையவில்லை என்று இந்த ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது. உதாரணமாக வெகு குறைவான இளைஞர்களே கருத்தடை முறைகளை பின்பற்றுகிறார்கள். அதிலும் பெரும்பாலும் கருத்தடை அறுவை சிகிச்சை முறைகளை பின்பற்றுகிறார்கள். வெகு சிலரே பாலியல் மற்றும் மகளிர் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிகிச்சை பெறுவதாக தெரிவித்தனர். அதிலும் இருபாலரும் சம்மந்தப்பட்ட நோய்களுக்கு அரசு சார்ந்த மருத்துவமனைகளை விட தனியார் மருத்துவமனைகளையே பெரும்பாலானவர்கள் நாடுகின்றனர். சிகிச்சை எடுப்பதில் உள்ள அக்கறை யின்மை, அரசு மருத்துவமனைகளுக்கும் இளைஞர்களுக்குமிடையே உள்ள இடைவெளி, திருமணம் ஆகாத மற்றும் திருமணம் ஆன இளம் பெண்கள் மற்றும் ஆண்களிடையே காணப்படும் பலவிதமுரண்பாடுகள் மற்றும் பாதிப்புகளை போக்கும் அளவில் சுகாதார பணியாளர்களுக்கு உணர்த்தப்படவேண்டும் என்பதைக் காட்டுகிறது.

பாலியல் மற்றும் இனப்பெருக்க நலம் தொடர்பான தகவல்கள் மற்றும் சேவைகளில் திருமணமான மற்றும் திருமணமாகாத இளம் ஆண்கள் மற்றும் பெண்களுக்குண்டான தேவையையும் உரிமையையும் உணர்த்தும் பொருட்டு திட்டங்கள் அமையவேண்டும். கருத்தடை சேவைகள் மற்றும் ஆலோசனைகள் அனைவருக்கும் திருமணமாகாதவர்கள் உட்பட சுகாதாரப்பணியாளர்கல் வேறுபட்ட வழிமுறைகளைக் கையாண்டு இளை சமூகத்தினரை அடைவதற்கு எடுத்துறைக்க வேண்டியது அவசியம். இரகசியமான சூழ்நிலையிலும் இருக்க வேண்டும். தேசிய ஊரக சுகாதார இயக்ககத்தின் கீழ் செயல்படும் இனப்பெருக்கம் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின் கோடிட்டு காட்டப்பட்ட அணுகுமுறைகள் செயல்படுத்தப்பட வேண்டும் என்று ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

அதே நேரத்தில் மனநலம் ரீதியான பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும். ஒரு சில இளம் ஆண்களும் மற்றும் இளம் பெண்களும் மனநல கோளாறு அறிகுறிகளால் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தாலும், திருமணம் ஆகாதவர்களைவிட திருமணம் ஆனவர்களிடம் இது அதிகமாகக் காணப்படுகிறது. இளைஞர்கள், குறிப்பாக திருமணமானவர்கள் பாலியல் மற்றும் இனப்பெருக்க நல சேவைகள் பெற வரும்போது அவர்களுக்கு மனநல கோளாறுகள் சம்பந்தமாகவும் ஆய்வுகள் செய்யும் அளவுக்கு திட்டங்கள் மற்றும் முயற்சிகள் தேவை. அவ்வாற ான அறிகுறிகளுடன் இருப்பவர்களை அதற்குரிய சேவை மையங்களுக்கு பரிந்துரைக்க வேண்டும்.

# எதிர்கால ஆராய்ச்சிக்கு வழிழிறைகள்

இந்த ஆய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்ட முடிவுகள் தமிழ்நாட்டின் இளைஞர்களைப் பற்றி ஒரு விரிவானஅறிக்கை கொடுத்துள்ளது. அதே நேரத்தில் மேன்மேலும் ஆய்வுக்குட்படுத்தக்கூடிய அநேக விஷயங்களை எழுப்பியுள்ளது

குறிப்பாக இளைஞர்கள் பருவமாற்றத்துக்கு ஆளாகும்பொழுது ஏற்படக்கூடிய அனுபவத்தின்காரணங்கள் பின்விளைவுகள் மற்றும் செயல்கள் ஆய்வு செய்யப்பட வேண்டியது. இளைஞர்கள் பற்றிய ஆய்வில், கணக்கெடுப்பாளர்கள் கண்டுபிடித்த அநேக தகவல்கள், இடைவெளிகளை நிரப்ப மிகச் சிறந்த புள்ளிவிவர ஆதாரமாக விளங்கினாலும், இன்னும் அதிகமாக ஆய்வு செய்யப்பட வேண்டிய அறிவு சார்ந்த பல இடைவெளிகள் இருக்கின்றன.

இளைஞர்களுடைய சீரான பருவ மாற்றத்திற்கு தடையாக இருக்கும் விஷயங்களான உயர்நிலைப் பள்ளி முடித்தல், பொருளாதார நடவடிக்கை, பாலியல் உறவுகள், திருமணம் பெற்றோராதல் இவைகளைஆழ்ந்து ஆராயக்கூடிய அளவிற்கு மற்றுமொரு ஆய்வு தேவை என்பதை இந்த ஆய்வு உறுதிபடுத்துகிறது. மேலும், நண்பர்களின் தேவையை வெளிக் கொணர்தல், தகவல் சேவைகளில் இளைஞர்களுடைய ஈடுபாடு, இளைஞர்களுடைய சீரான பருவ மாற்றத்திற்கு மேற்கண்ட காரணிகள் எப்படி தடையாக அல்லது உதவுவதாய் அமைவது இவைகளையெல்லாம் ஆழ்ந்து ஆய்வு செய்யவும் ஆராய்ச்சி தேவைப்படுகிறது. இளைஞர்கள் 24 வயாதை எட்டும் வரையில் ஒவ்வொரு குறிப்பிட்ட உயது பிரிவிலும் சீரான இடைவெள்யில் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று இந்த ஆய்வு பொதுவான பரிந்துரை செய்கிறது. மேற்கண்ட ஆய்வு வாழ்க்கையின் நீண்ட கால அணுகுமுறைகளை பற்றி அறியவும், கண்டுபிடிக்கவும், ஆரோக்கியமான பருவமாற்றத்திற்கு உதவியாக உள்ள காரணிகள் பற்றி அறியவும், இளைஞர்களின் பிற்கால வாழ்க்கைக்கு உந்துதலாக இருக்கும் அனுபவங்கள் பற்றி அறிய ஆய்வாளர்களுக்கு வழிவகைசெய்யவும் உதவியாக இருக்கிறது.

“ஆப்சேஷன் ரிசர்ச்” தேவைப்படுகிறது. திருமணமான பெண்களின் தேவைகளைதெரிவிப்பதிலும், ஆண்மை மற்றும் பெண்மை தன்மையின் இயல்புகளில் மாற்றம் காணவும், பெண்கல்வியை வளப்படுத்தவும், வேலைவாய்ப்புத் துறையிலும் தொழில் கல்வியிலும் வேலைக்கேற்ற திறன்களை வளர்த்துக் கொள்ளவும், வாழ்ககை மற்றும் பாலியல் கல்வி அளிப்பதற்கும் நம்நாட்டில் அனேக தலையீடுகள் இருந்தாலும் அவற்றில் ஒரு சிலது மட்டும் ஆழ்ந்து மதிப்பீடு செய்யப்பட்டன. எனவே இப்போது தேவைப்படுவது என்னவென்றால், கவனமுடன் வடிவமைக்கப்பட்ட மற்றும் ஆழ்ந்து சோதிக்கப்பட்ட மாதிரிகள். இந்த மாதிரிகள், திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்துவதாகவும் அதனை செயல்படுத்தவும், அவற்றின் திறனையும் பயனையும் எடைபோடுவதும் அவசியமாகிறது.

சுருக்கமாக இந்த ஆய்வு முதன்முதலாக தமிழக இளைஞர்களுடைய பல்வேறு நிலைகய்ளை விளக்கியுள்ளது. இந்த ஆய்வு இளைஞர்களின் வாழ்க்கை நடைமுறைகளில் உள்ள பல்வேறு நல்ல அம்சங்களை குறிப்பாகச் சொன்னபோதிலும், இளைஞர்கள் பருவ மாறுதலுக்கு உட்படும்போது சந்திக்க வேண்டிய சவால்களைப்பற்றி எச்சரிக்கை செய்துள்ளது. இந்த ஆய்வு இளைஞர்களின் பலதரப்பட்ட நிலைகள், தேவைகள் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவைபற்றி கோடிட்டுக் காட்டுகிறது. திட்டங்கள் மேற்கண்டவைகளை அங்கீகரிப்பதாக இருப்பது அவசியம். இந்த ஆய்வு தமிழக இளைஞர்களுக்குத் தேவைப்படும் திட்டங்களை உருவாக்குவதற்கான வடிவமைப்பாகும். திட்டத்தின் தாக்கத்தை அளக்கும் அடிப்படை அளவுகோலாக இது அமையும்.

## Key indicators by sex of respondents, 2006-2007: Tamil Nadu

| Key indicators | Men (15-24) | Women (15-24) | Men (15-24) | Women (15-24) | Men (15-24) | Women (15-24) |
|---|---|---|---|---|---|---|
| | Combined | | Urban | | Rural | |
| **Number of respondents** | **1,913** | **5,008** | **890** | **2,151** | **1,023** | **2,857** |
| **Socio-demographic profile** | | | | | | |
| 1. Completed 7 years of schooling (%) | 20.0 | 19.6 | 18.5 | 17.1 | 21.3 | 21.8 |
| 2. Not in school at age 12 (%) | 13.9 | 17.4 | 12.4 | 14.0 | 15.0 | 20.1 |
| 3. Engaged in paid and/or unpaid work in last 12 months (%) | 62.5 | 33.8 | 59.0 | 24.0 | 65.2 | 41.7 |
| 4. Engaged in paid work in last 12 months (%) | 60.2 | 30.9 | 57.2 | 22.0 | 62.5 | 38.0 |
| 5. Unemployment rate (as % of labour force) | 7.0 | 14.6 | 6.5 | 15.0 | 7.2 | 14.3 |
| 6. Mother discussed reproductive processes with respondent (%) | 0.1 | 2.0 | 0.2 | 1.8 | 0.0 | 2.2 |
| 7. Father discussed reproductive processes with respondent (%) | 0.2 | 0.0 | 0.4 | 0.1 | 0.0 | 0.0 |
| 8. Talked to mother about friends (%) | 75.9 | 82.5 | 79.0 | 86.2 | 73.5 | 79.6 |
| 9. Talked to father about friends (%) | 70.0 | 60.5 | 71.9 | 63.2 | 68.6 | 58.4 |
| **Young people's control over their own lives** | | | | | | |
| 10. Had a bank account (%) | 18.9 | 31.0 | 22.4 | 32.6 | 16.3 | 29.7 |
| 11. Took independent decisions about buying clothes (%) | 58.9 | 28.0 | 60.6 | 33.1 | 57.5 | 24.0 |
| 12. Allowed to visit friends within village/neighbourhood unescorted (%) | N.A. | 67.4 | N.A. | 65.5 | N.A. | 68.9 |
| 13. Allowed to visit health facility unescorted (%) | N.A. | 11.8 | N.A. | 11.5 | N.A. | 12.0 |
| **Sexual and reproductive health knowledge** | | | | | | |
| 14. Correct knowledge of legal minimum age at marriage for females (%) | 42.1 | 32.7 | 40.7 | 30.6 | 43.1 | 34.4 |
| 15. Aware that a woman can get pregnant at first sexual intercourse (%) | 28.6 | 50.0 | 32.9 | 47.0 | 25.4 | 52.4 |
| 16. Aware of: | | | | | | |
| a. Condom (%) | 95.8 | 83.4 | 96.2 | 86.1 | 95.6 | 81.3 |
| b. Oral contraceptive pills (%) | 57.1 | 65.4 | 58.1 | 65.0 | 56.4 | 65.7 |
| c. IUD (%) | 29.0 | 63.3 | 35.1 | 64.7 | 24.4 | 62.2 |
| d. Withdrawal (%) | 19.1 | 13.3 | 21.0 | 14.0 | 17.7 | 12.7 |
| 17. Correct specific knowledge[1] of: | | | | | | |
| a. Condom (%) | 77.0 | 38.6 | 79.2 | 40.0 | 75.4 | 37.5 |
| b. Oral contraceptive pills (%) | 20.2 | 23.5 | 22.9 | 24.2 | 18.0 | 23.0 |
| c. IUD (%) | 19.0 | 38.2 | 24.9 | 39.0 | 14.5 | 37.7 |
| d. Withdrawal (%) | 16.3 | 8.4 | 17.8 | 8.1 | 15.2 | 8.6 |

| Key indicators | Men (15-24) | Women (15-24) | Men (15-24) | Women (15-24) | Men (15-24) | Women (15-24) |
|---|---|---|---|---|---|---|
| | Combined | | Urban | | Rural | |
| 18. Reported that condoms do not reduce sexual pleasure (%) | 31.2 | 20.6 | 34.2 | 18.7 | 28.8 | 22.2 |
| 19. Comprehensive knowledge of the conditions under which abortion is legal[2] (%) | 6.0 | 5.8 | 7.9 | 6.4 | 4.5 | 5.3 |
| 20. Heard about: | | | | | | |
| a. HIV/AIDS (%) | 98.9 | 97.1 | 99.0 | 98.6 | 98.7 | 96.0 |
| b. STI/RTI (%) | 30.5 | 11.7 | 31.4 | 12.0 | 29.7 | 11.5 |
| 21. Comprehensive knowledge of HIV[3] (%) | 49.6 | 45.5 | 54.6 | 49.4 | 45.7 | 42.3 |
| **Pre-marital romantic and sexual relationships** | | | | | | |
| 22. Ever had an opposite-sex romantic partner (%) | 22.7 | 15.4 | 20.0 | 12.8 | 24.9 | 17.5 |
| 23. First spent time alone with an opposite-sex romantic partner before age 15 (%) | 15.6 | 33.5 | 15.2 | 32.0 | 15.6 | 34.5 |
| 24. Ever had pre-marital sexual relations with an opposite-sex romantic partner (%) | 5.8 | 1.5 | 4.3 | 0.9 | 6.9 | 2.0 |
| 25. Ever had pre-marital sex[4] (%) | 9.2 | 2.4 | 6.5 | 1.0 | 11.3 | 3.5 |
| **Self-reported health problems** | | | | | | |
| 26. Anxiety about *swapnadosh*/nocturnal emission (men) in last 12 months (%) | 29.3 | N.A. | 31.6 | N.A. | 27.5 | N.A. |
| 27. Menstrual problems (women) in last 3 months (%) | N.A. | 9.0 | N.A. | 7.7 | N.A. | 10.1 |
| 28. Symptoms of genital infection in last 3 months[5] (%) | 1.7 | 21.0 | 1.1 | 15.3 | 2.1 | 25.5 |
| **Youth life-style** | | | | | | |
| 29. Consumed alcohol at least once in last month (%) | 7.4 | 0.0 | 6.1 | 0.0 | 8.3 | 0.1 |
| 30. Consumed drugs at least once in last month (%) | 0.1 | 0.0 | 0.1 | 0.0 | 0.0 | 0.0 |
| 31. Consumed tobacco products at least once in last month (%) | 17.4 | 0.4 | 15.4 | 0.5 | 18.9 | 0.4 |
| 32. Involved in physical fights in last 12 months (%) | 9.7 | 2.8 | 8.8 | 1.6 | 10.3 | 3.8 |
| 33. Watched television often (%) | 10.8 | 14.0 | 11.9 | 15.4 | 9.9 | 12.9 |
| **Programme participation and voting experience** | | | | | | |
| 34. Participated in youth-related programmes implemented in the community in last 3 years (%) | 13.9 | 9.1 | 15.4 | 6.1 | 12.7 | 11.4 |
| 35. Voted in last election[6] (%) | 81.9 | 65.6 | 83.8 | 67.0 | 80.6 | 64.5 |
| **Marriage** | | | | | | |
| 36. Youth aged 20-24 married before age 18 | 0.3 | 18.1 | 0.2 | 15.3 | 0.4 | 20.4 |

*Note: [1]Among all youth. [2]Includes being aware that: (1) termination of pregnancy is legal for married women; (2) termination of pregnancy is legal for unmarried women; (3) aborting a foetus after 20 weeks of pregnancy is illegal, and (4) sex-selective abortion is illegal. [3]Includes: (1) identification of two major ways of preventing HIV (using condoms and having a single sexual partner); (2) rejection of three common misconceptions about HIV transmission; and (3) awareness that one cannot tell by looking at a person whether he/she has HIV. [4]Includes sex with opposite-sex romantic partner, same-sex partner, married woman (for young men not including wife), sex worker (for young men), casual partner, and forced and exchange sex relations, as well as responses in linked anonymous reporting (through sealed envelope). [5]Includes genital ulcers, genital itching, swelling in the groin, discharge, burning during urination, etc. [6]Among those aged 20 or above. N.A.: Not applicable.*

## Key indicators by sex and marital status of respondents, 2006-2007: Tamil Nadu

| Key indicators | MM (15–29) | MW (15–24) | UM (15–24) | UW (15–24) | MM (15–29) | MW (15–24) | UM (15–24) | UW (15–24) | MM (15–29) | MW (15–24) | UM (15–24) | UW (15–24) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Combined | | | | Urban | | | | Rural | | | |
| **Number of respondents** | **1,322** | **2,007** | **1,666** | **3,001** | **653** | **804** | **789** | **1,347** | **669** | **1,203** | **877** | **1,654** |
| **Socio-demographic profile** | | | | | | | | | | | | |
| 1. Completed 7 years of schooling (%) | 40.7 | 28.4 | 17.3 | 13.9 | 39.2 | 25.2 | 15.7 | 12.3 | 41.9 | 30.5 | 18.7 | 15.3 |
| 2. Not in school at age 12 (%) | 31.8 | 28.7 | 11.4 | 10.0 | 26.3 | 23.5 | 10.3 | 8.6 | 35.7 | 32.3 | 12.4 | 11.2 |
| 3. Engaged in paid and/or unpaid work in last 12 months (%) | 99.7 | 28.5 | 58.5 | 37.4 | 99.4 | 15.3 | 55.2 | 29.0 | 99.9 | 37.4 | 61.2 | 44.7 |
| 4. Engaged in paid work in last 12 months (%) | 99.2 | 25.6 | 56.1 | 34.5 | 99.3 | 13.5 | 53.3 | 26.9 | 99.2 | 33.7 | 58.4 | 41.1 |
| 5. Unemployment rate (as % of labour force) | 0.9 | 15.5 | 7.9 | 14.0 | 0.8 | 22.9 | 7.4 | 12.4 | 1.1 | 12.6 | 8.3 | 15.3 |
| 6. Mother discussed reproductive processes with respondent (%) | 0.1 | 3.7 | 0.1 | 1.0 | 0.0 | 2.9 | 0.3 | 1.2 | 0.1 | 4.3 | 0.0 | 0.8 |
| 7. Father discussed reproductive processes with respondent (%) | 0.1 | 0.1 | 0.2 | 0.0 | 0.0 | 0.0 | 0.5 | 0.1 | 0.2 | 0.1 | 0.0 | 0.0 |
| 8. Talked to mother about friends (%) | 63.2 | 76.4 | 77.1 | 86.4 | 65.9 | 79.6 | 79.9 | 89.9 | 61.4 | 74.2 | 74.8 | 83.4 |
| 9. Talked to father about friends (%) | 56.8 | 52.0 | 71.6 | 65.7 | 58.2 | 54.2 | 73.3 | 68.0 | 55.9 | 50.6 | 70.2 | 63.7 |
| **Young people's control over their own lives** | | | | | | | | | | | | |
| 10. Had a bank account (%) | 27.2 | 30.6 | 19.1 | 31.2 | 35.2 | 29.4 | 22.1 | 34.4 | 21.7 | 31.4 | 16.8 | 28.4 |
| 11. Took independent decisions about buying clothes (%) | 72.1 | 30.1 | 57.8 | 26.7 | 75.1 | 34.5 | 60.5 | 32.2 | 70.1 | 27.2 | 55.7 | 21.7 |
| 12. Allowed to visit friends within village/neighbourhood unescorted (%) | N.A. | 65.2 | 79.5 | 68.8 | N.A. | 63.0 | 81.8 | 66.9 | N.A. | 66.8 | 77.6 | 70.6 |
| 13. Allowed to visit health facility unescorted (%) | N.A. | 17.3 | 41.9 | 8.1 | N.A. | 17.3 | 42.2 | 8.1 | N.A. | 17.4 | 41.6 | 8.1 |
| **Sexual and reproductive health knowledge** | | | | | | | | | | | | |
| 14. Correct knowledge of legal minimum age at marriage for females (%) | 39.6 | 33.0 | 41.7 | 32.5 | 39.2 | 31.9 | 40.4 | 29.9 | 39.8 | 33.8 | 42.8 | 34.8 |
| 15. Aware that a woman can get pregnant at first sexual intercourse (%) | 45.9 | 68.4 | 26.8 | 37.9 | 52.3 | 67.9 | 31.1 | 34.9 | 41.4 | 68.8 | 23.3 | 40.5 |
| 16. Aware of: | | | | | | | | | | | | |
| a. Condom (%) | 98.3 | 88.0 | 95.6 | 80.4 | 98.7 | 91.4 | 96.0 | 83.1 | 97.9 | 85.6 | 95.2 | 78.1 |
| b. Oral contraceptive pills (%) | 71.7 | 76.3 | 56.2 | 58.2 | 74.4 | 76.4 | 57.0 | 58.4 | 69.7 | 76.2 | 55.7 | 58.0 |
| c. IUD (%) | 48.0 | 81.6 | 28.3 | 51.2 | 55.1 | 87.8 | 34.1 | 51.2 | 43.0 | 77.4 | 23.6 | 51.3 |
| d. Withdrawal (%) | 42.5 | 26.4 | 16.9 | 4.7 | 44.6 | 28.5 | 19.1 | 5.6 | 41.1 | 24.9 | 15.0 | 3.9 |
| 17. Correct specific knowledge[1] of: | | | | | | | | | | | | |
| a. Condom (%) | 89.4 | 49.5 | 76.1 | 31.4 | 92.1 | 54.4 | 78.3 | 31.7 | 87.5 | 46.2 | 74.2 | 31.2 |
| b. Oral contraceptive pills (%) | 34.0 | 34.7 | 19.8 | 16.1 | 36.3 | 37.3 | 22.9 | 16.6 | 32.3 | 33.0 | 17.3 | 15.8 |
| c. IUD (%) | 34.2 | 57.2 | 18.4 | 25.7 | 42.0 | 64.0 | 24.1 | 24.4 | 28.9 | 52.7 | 13.7 | 26.8 |
| d. Withdrawal (%) | 40.2 | 20.0 | 13.9 | 0.8 | 42.5 | 20.7 | 15.8 | 0.8 | 38.4 | 19.4 | 12.5 | 0.8 |
| 18. Reported that condoms do not reduce sexual pleasure (%) | 41.1 | 30.8 | 31.1 | 13.3 | 45.3 | 27.6 | 34.1 | 13.0 | 38.2 | 33.2 | 28.6 | 13.4 |
| 19. Comprehensive knowledge of the conditions under which abortion is legal[2] (%) | 6.6 | 6.9 | 6.3 | 5.1 | 7.4 | 7.8 | 8.6 | 5.6 | 6.0 | 6.3 | 4.5 | 4.6 |
| 20. Heard about: | | | | | | | | | | | | |
| a. HIV/AIDS (%) | 99.0 | 96.8 | 98.9 | 97.3 | 99.1 | 98.3 | 99.1 | 98.7 | 99.0 | 95.8 | 98.7 | 96.1 |
| b. STI/RTI (%) | 37.4 | 15.6 | 30.2 | 9.1 | 40.9 | 15.2 | 31.6 | 10.1 | 35.0 | 15.9 | 29.1 | 8.3 |
| 21. Comprehensive knowledge of HIV[3] (%) | 48.3 | 44.7 | 49.9 | 46.0 | 56.0 | 48.3 | 55.3 | 50.1 | 43.0 | 42.4 | 45.6 | 42.3 |
| **Pre-marital romantic and sexual relationships** | | | | | | | | | | | | |
| 22. Ever had an opposite-sex romantic partner (%) | 34.8 | 24.0 | 19.9 | 9.8 | 29.3 | 21.5 | 17.6 | 7.8 | 38.6 | 25.7 | 21.9 | 11.5 |
| 23. First spent time alone with an opposite-sex romantic partner before age 15 (%) | 5.0 | 35.1 | 18.0 | 31.1 | 5.0 | 34.5 | 17.4 | 28.2 | 5.0 | 35.4 | 18.4 | 32.8 |

| Key indicators | MM (15–29) | MW (15–24) | UM (15–24) | UW (15–24) | MM (15–29) | MW (15–24) | UM (15–24) | UW (15–24) | MM (15–29) | MW (15–24) | UM (15–24) | UW (15–24) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Combined | | | | Urban | | | | Rural | | | |
| 24. Ever had pre-marital sexual relations with an opposite-sex romantic partner (%) | 12.0 | 2.5 | 4.6 | 0.8 | 8.5 | 1.4 | 3.7 | 0.5 | 14.4 | 3.3 | 5.3 | 1.1 |
| 25. Ever had pre-marital sex[4] (%) | 18.2 | 4.1 | 7.7 | 1.3 | 14.2 | 1.9 | 5.5 | 0.6 | 20.9 | 5.6 | 9.5 | 1.9 |
| **Self-reported health problems** | | | | | | | | | | | | |
| 26. Anxiety about *swapnadosh*/nocturnal emission (men) in last 12 months (%) | 8.9 | N.A. | 31.3 | N.A. | 10.1 | N.A. | 33.5 | N.A. | 8.0 | N.A. | 29.6 | N.A. |
| 27. Menstrual problems (women) in last 3 months (%) | N.A. | 8.4 | N.A. | 9.5 | N.A. | 7.2 | N.A. | 8.0 | N.A | 9.1 | N.A. | 10.7 |
| 28. Symptoms of genital infection in last 3 months[5] (%) | 1.4 | 24.1 | 1.7 | 18.9 | 1.1 | 19.1 | 0.9 | 13.0 | 1.7 | 27.5 | 2.3 | 24.1 |
| **Youth life-style** | | | | | | | | | | | | |
| 29. Consumed alcohol at least once in last month (%) | 17.7 | 0.0 | 6.1 | 0.0 | 17.3 | 0.0 | 5.2 | 0.0 | 18.0 | 0.1 | 6.9 | 0.1 |
| 30. Consumed drugs at least once in last month (%) | 0.1 | 0.0 | 0.1 | 0.0 | 0.0 | 0.0 | 0.1 | 0.0 | 0.1 | 0.0 | 0.0 | 0.0 |
| 31. Consumed tobacco products at least once in last month (%) | 37.5 | 0.7 | 14.6 | 0.2 | 39.0 | 0.9 | 13.1 | 0.2 | 36.5 | 0.7 | 15.9 | 0.2 |
| 32. Involved in physical fights in last 12 months (%) | 9.2 | 3.2 | 9.3 | 2.5 | 9.6 | 1.2 | 8.3 | 1.8 | 8.9 | 4.6 | 10.1 | 3.2 |
| 33. Watched television often (%) | 9.0 | 15.5 | 11.3 | 13.0 | 8.1 | 16.5 | 12.4 | 14.7 | 9.6 | 14.9 | 10.3 | 11.4 |
| **Programme participation and voting experience** | | | | | | | | | | | | |
| 34. Participated in youth-related programmes implemented in the community in last 3 years (%) | 11.6 | 15.9 | 14.1 | 4.6 | 12.2 | 11.4 | 15.2 | 3.1 | 11.2 | 19.0 | 13.2 | 5.8 |
| 35. Voted in last election[6] (%) | 91.4 | 65.0 | 81.7 | 66.5 | 90.8 | 66.0 | 83.7 | 68.4 | 91.9 | 64.3 | 79.9 | 64.8 |

| Married life | MM (15-29) | MW (15-24) | MM (15-29) | MW (15-24) | MM (15-29) | MW (15-24) |
|---|---|---|---|---|---|---|
| | Combined | | Urban | | Rural | |
| 36. Reported a love marriage (%) | 20.1 | 19.1 | 18.4 | 17.9 | 21.3 | 20.0 |
| 37. Usually discussed money matters with spouse (%) | 95.6 | 92.8 | 95.9 | 92.2 | 95.3 | 93.2 |
| 38. Reported any physical violence perpetrated on wife by husband (%) | 34.3 | 27.0 | 31.9 | 22.0 | 36.0 | 30.3 |
| 39. Husband ever forced wife to have sex (%) | 14.7 | 25.3 | 15.3 | 23.3 | 14.2 | 26.6 |
| 40. Ever had extra-marital sex (%) | 3.5 | 0.1 | 3.3 | 0.2 | 3.6 | 0.1 |
| 41. Ever used contraception within marriage (%) | 18.3 | 21.1 | 20.5 | 26.9 | 16.9 | 17.2 |
| 42. Currently using contraception (%) | 15.7 | 16.9 | 17.5 | 21.7 | 14.5 | 13.8 |
| 43. Ever used a contraceptive method to delay first pregnancy (%) | 2.5 | 1.6 | 2.8 | 1.7 | 2.3 | 1.5 |
| 44. Children ever born (mean) | 1.1 | 1.1 | 1.0 | 1.0 | 1.1 | 1.1 |
| 45. Ideal number of children[7] (mean) | 2.1 | 2.1 | 2.1 | 2.1 | 2.1 | 2.1 |
| 46. First delivery in health institution[8] | 81.2 | 83.8 | 80.9 | 87.5 | 81.4 | 81.2 |
| 47. First birth attended by a health professional[9] (%) | 93.0 | 93.4 | 97.7 | 97.4 | 89.7 | 90.7 |

*Note: MM: Married men, MW: Married women, UM: Unmarried men, UW: Unmarried women. [1]Among all youth. [2]Includes being aware that: (1) termination of pregnancy is legal for married women; (2) termination of pregnancy is legal for unmarried women; (3) aborting a foetus after 20 weeks of pregnancy is illegal, and (4) sex-selective abortion is illegal. [3]Includes: (1) identification of two major ways of preventing HIV (using condoms and having a single sexual partner); (2) rejection of three common misconceptions about HIV transmission; and (3) awareness that one cannot tell by looking at a person whether he/she has HIV. [4]Includes sex with opposite-sex romantic partner, same-sex partner, married woman (for young men not including wife), sex worker (for young men), casual partner, and forced and exchange sex relations, as well as responses in linked anonymous reporting (through sealed envelope). [5]Includes genital ulcers, genital itching, swelling in the groin, discharge, burning during urination, etc. [6]Among those aged 20 or above. [7]Includes only numeric responses. [8]Includes those whose first pregnancy outcome was a live or still birth. [9]Includes institutional delivery or home delivery attended by a doctor/ANM/nurse/LHV, midwife (trained) or other health professional, among those whose first pregnancy outcome was a live or still birth. N.A.: Not applicable.*

## Notes



Supported by:

the David & Lucile Packard FOUNDATION

MACARTHUR
The John D. and Catherine T. MacArthur Foundation